# வானவில்

# VAANAVIL

| இதழ் 164 | ஆவணி 2024 |
|---|---|
| ISSUE 164 | August 2024 |


# கேள்விக்குறியாகும் ஆசியாவின் எதிர்காலம்




**ஆ**சியா இன்று உலக ஆதிக்கத்துக்கான ஆடுகளமாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்டத்தின் பிரதான நாயகனாக அமெரிக்கா திகழ்கிறது. தனது ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஆசியாவில் காட்ட ஆரம்பித்த அமெரிக்கா, அங்கேயே தனது இறுதி மூச்சை விடும் நிலையும் உள்ளது.

இரண்டாம் உலக யுத்த முடிவின் பின்னரே அமெரிக்கா ஒரு உலக ஏகாதிபத்தியமாக வளர்ந்தது. தனது புதிய பொருளாதார பலத்தின் மூலமும், அணு ஆயுத ஆற்றலின் மூலமும் அதுவரை உலக ஏகாதிபத்தியமாக இருந்த பிரித்தானியாவை அமெரிக்கா பின்னுக்குத் தள்ளியது. தனது புதிய பலத்தை நிரூபிக்கவே அது உலக யுத்த முடிவில் யப்பான் மீது இரு தடவைகள் அணுகுண்டுகளையும் வீசியது.

ஆனாலும், முன்னர் பிரித்தானியா இருந்தது போல, அமெரிக்காவால் ஒற்றை வல்லரசாக தலையெடுக்க முடியவில்லை. காரணம், அமெரிக்கா போலவே, இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சோசலிச சோவியத் யூனியனும் உலகின் இன்னொரு வல்லரசாக அமெரிக்காவுக்குப் போட்டியாக வளர்ந்து வந்தது. அது மட்டுமின்றி, சோவியத் யூனியன் தனித்து நிற்கவும் இல்லை. அது இரண்டாம் உலக யுத்த காலத்தில் சோவியத் செஞ்சேனையால் விடுதலை செய்யப்பட்டு, சோசலிச நாடுகளாக மாறிய பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் தனது நட்பு சக்திகளாகவும், பாதுகாப்பு கேடயமாகவும் கொண்டிருந்தது.

மறுபக்கத்தில், உலகின் சனத்தொகை கூடிய சீனாவில் இரண்டாம் உலக யுத்த முடிவில் சோசலிச அரசொன்று மலர்ந்திருந்தது. கூடவே வியட்நாமிலும், வட கொரியாவிலும் கூட சோசலிச அரசுகள் உருவாகியிருந்தன. இவை பொதுவாக ஏகாதிபத்தியத்துக்கெதிராக ஆசியாவில் உருவாகியிருந்த காத்திரமான மாற்றங்களாக இருந்தன.

இன்னொரு பக்கத்தில், இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து பிரித்தானியாவினதும், சில மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் கொலனிகளாக இருந்த பல ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் தமது கொலனித்துவ நுகத்தடியைத் தூக்கியெறிந்து, தமக்கென தேசிய அரசுகளை அமைத்து சுதந்திர நாடுகளாக வீறுநடை போடத் தொடங்கி இருந்தன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், பிரித்தானியா போன்று, மேற்கத்தைய நாடுகள் போன்று, அமெரிக்காவால் உலகில் நேரடியாக கொலனி நாடுகளை கைப்பற்றி உருவாக்க முடியவில்லை. எனவே, அது மறைமுக வழிகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது. பிரதானமாக தன்னிடம் புதிதாகக் குவிந்திருந்த நிதி மூலதனத்தின் மூலமாக பல நாடுகளைத் தனது பிடியில் கொண்டு வந்தது. அத்துடன், பல ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தனது சதி, சீர்குலைவு நடவடிக்கைகளின் மூலமும், இராணுவ சதிகளின் மூலமும் ஆட்சி மாற்றங்களைச் செய்து தனக்குச் சார்பான பொம்மை அரசுகளை உருவாக்கியது.

இருப்பினும், சில வரலாற்றுச் சூழ்நிலைகளின் காரணமாக, கொரியாவிலும் வியட்நாமிலும் அமெரிக்கா நேரடி ஆக்கிரமிப்புப் போர்களில் ஈடுபடும் சூழ்நிலையும் உருவானது. ஆனால், அந்த இரண்டு போர்களிலும் அமெரிக்கா படுதோல்வியைச் சந்தித்தது. இருந்தும் அமெரிக்கா தனது ஏகாதிபத்திய மூர்க்கத்தனத்தை நிறுத்தவில்லை.

அதே நேரத்தில் அமெரிக்கா தனது சதி மற்றும் சீர்குலைவு வேலைகளின் மூலம் சோசலிச நாடுகளான சோவியத் யூனியனிலும் இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இருந்த முதலாளித்துவ சக்திகளுக்கு ஊக்கமளித்து அந்நாடுகளில் முதலாளித்துவ ஆட்சி மாற்றங்களை வெற்றிகரமாக அரங்கேற்றியது.

இருப்பினும், சோவியத் ஒன்றியம் முதலாளித்துவ மீட்சிக்குப் பின்னர் பல நாடுகளாக சிதறுண்டாலும், எஞ்சிய

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் வாக்குகள் யாருக்கு?

இலங்கையின் 9வது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. இரண்டு கோடி 20 இலட்சம் மக்களைக் கொண்ட இலங்கையில், 2024 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் ஒரு கோடி 71 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள். மொத்தமாக 39 வேட்பாளர்கள் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இவர்களில் பெண்கள் எவருமில்லை.

39 வேட்பாளர்களில் நான்கு பேரே பிரதான வேட்பாளர்கள். ஏனைய 35 வேட்பாளர்களும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் நோக்கோடு போட்டியிடவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இனம் மற்றும் பிரதேச ரீதியாக வாக்குகளைப் பிரித்து பிரதான வேட்பாளர்களில் குறிப்பிட்ட ஒருவரை வெற்றிபெற வைப்பது, பிரதான வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பாத வாக்காளர்களைக் குறிவைப்பது, கொள்கை அடிப்படை, புகழ், பிரபல்யம் போன்றன இந்த 35 பேரும் போட்டியிடுவதற்கான காரணங்களாக இருக்கலாம்.

2019 ஆம் ஆண்டின் கடைசி ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள் இவர்களில் முதல் மூன்று பிரதான வேட்பாளர்கள் முறையே 52.25%, 49.99%, 3.16% வாக்குகளைப் பெற்றார்கள். மீதமுள்ள முப்பத்திரண்டு வேட்பாளர்கள் தமக்கிடையே 3% வாக்குகளைப் பகிர்ந்து கொண்டனர். அதேபோன்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் பிரதான வேட்பாளர்கள் தங்களிடையே 90% இற்கும் அதிகமான வாக்குகளை பகிர்ந்து கொள்வார்கள் எனவும் எவருக்கும் 50% வாக்குகள் கிடைக்கப்போவதில்லை எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தல் போலவே, இந்தத் தேர்தலும் 'வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது' என்றே வர்ணிக்கப்படுகின்றது. அதேபோன்று வேட்பாளர்களின் வாக்குறுதிகளும் முன்னைய தேர்தல்கால நிலைமைகளையே நினைவூட்டுகின்றன. தேசிய ஒற்றுமை, பொருளாதார முன்னேற்றம், அரசியல் ஸ்திரத்தன்மை என்பவை அனைத்துமே கடந்த 76 வருடங்களாகக் கேட்டுச் சலித்துப்போன சொல்லாடல்கள். ஆனால் ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர்கள் எந்தவித வெட்கமுமின்றி இவற்றையே காற்றில் பறக்க விடுகின்றனர்.

உலகளவில் வெளிநாட்டுக்கடன், உள்நாட்டுக்கடன் என கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகிய முக்கிய மூன்றாமுலக நாடாக இலங்கை பார்க்கப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமும் (அரகலயா) அதன் விளைவாக, 2019 ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தெரிவாகிய கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான ஆட்சிக் கவிழ்ப்புமே ஆகும்.

இந்த நிலைமை உருவாகுவதற்கு சில வருடங்கள் முன்னதாகவே இலங்கையில் அதிகாரத்துவ ஆட்சி (authoritarian regime) நிலவுவதாகவும் இலங்கை சீனாவின் கடன் பொறியில் (Debt trap) சிக்கித் தவிக்கின்றது போன்றதுமான பிரச்சாரங்கள் மேற்கத்தைய கோப்பரேட் ஊடகங்களால் முன்னெடுக்கப்பட்டன. இந்த கோப்பரேட் ஊடகங்களின் தலையாய பணி உலகெங்கிலும் நவகாலனித்துவ ஆட்சியை உறுதி செய்வதே.

முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி முறை நிலவும் தெற்குலக நாடுகள் தொடர்பாக கோப்பரேட் ஊடகங்கள் அதிகளவில் உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்களையே மேற்கொண்டு வருகிறார்கள். ராஜபக்ச குடும்பத்தினர் மீது அதிகாரத்துவம், பாரிய ஊழல் குற்றச்சாட்டுகளை முன்வைத்த போதும், அவர்கள் ஜனநாயக ரீதியாக மக்களால் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்படுகிறார்கள் என்ற உண்மையையும், இலங்கையின் மொத்தக் கடனில் 10 வீதமே சீனாவினுடையது என்ற உண்மையையும் திட்டமிட்டு மறைத்து, வேறு வகையில் சித்தரித்ததின் பின்னாலிருந்த நிகழ்ச்சி நிரலை நாங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஆட்சி கவிழ்க்கப்பட்டு 2 வருடங்களின் பின்னர் நடக்கும் முதலாவது தேர்தல் என்பதால் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஏனெனில் நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்கள் கொண்டவராக இருப்பதால், ஜனாதிபதிப்பதவி என்பது குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிப்பதில் தீர்மானகரமானது.

பூகோள அரசியலில் இலங்கையை தம்வசப்படுத்த மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் இடைவிடாத முயற்சி எடுத்து வருகின்றன என்பது தெரிந்ததே. அதனால், அவர்களின் கழுகுக் கண்கள் ஜனாதிபதிக்கதிரையில் அமர்ந்திருப்பவரைச் சுற்றி நோட்மிட்ட வண்ணமே இருக்கும். நவகாலனித்துவ முறைமைக்கு ஒவ்வாதவராயின், அவரைக் கவிழ்ப்பதா அல்லது அவருடன் எவ்வாறான ராஜதந்திர உறவை வைத்துக்கொள்வது போன்ற விடயங்கள் குறித்து அவர்கள் தங்களிடையே விவாதிப்பார்கள். ஒருவேளை மேற்கத்தைய ஏகாதிபத்தியத்துடன் இசைந்து போகக்கூடிய ஒருவராயின், அடுத்த 5 வருட காலத்தில் இலங்கையை எவ்வாறு முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம் என்பதைத் துல்லியமாகத் திட்டமிடுவார்கள்.

இலங்கையில் சாதாரண மக்கள் பூகோள அரசியலைப்பற்றி பொதுவாக அக்கறைப்படுவதில்லை. அவர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை முன்வைத்தே தங்கள் வாக்கு யாருக்கு என்பதைத் தீர்மானிக்கிறார்கள். அதாவது பொருளாதாரம், வேலைவாய்ப்பு, நீதி, கல்வி, இனசமத்துவம், மருத்துவம் போன்றவையே அவர்களுக்கு முக்கியம். இந்த அடிப்படை விடயங்களில் பாகுபாடுகள் காட்டப்படுவதற்கு அதிகாரத்திலிருப்பவர்கள் புரியும் ஊழல்கள் என்றே சாதாரண மக்கள் கருதிக் கொள்கிறார்கள். இதில் உண்மையும் உள்ளது. எனவே ஊழல்கள் மற்றும் சகல பாகுபாடுகளையும் முற்றாகக் களையக்கூடிய அரசொன்றினை இலங்கையில் நிறுவுவதற்கே மக்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# வெட்கங்கெட்ட, சந்தர்ப்பவாத கட்சித்தாவல்கள்

இலங்கையில் எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலின் அல்லது பாராளுமன்றத் தேர்தலின்போது ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்குத் தாவும் அரசியல்வாதிகளின் வெட்கங்கெட்ட அறிவிப்புகளை ஏராளமாகக் காணக்கிடைக்கலாம். சில நாட்களுக்கு முன்பு வரை தாங்கள் கேலி செய்த ஒருவரை வெட்கங்கெட்ட வகையில் போற்றுவதும் அல்லது அதற்கு எதிர்மாறாக போற்றியவரை தூற்றியும் கொள்கிறார்கள்.

பிற கட்சிகளுக்கு தாவி தங்கள் புதிய தலைவர்களை வழிபடும் பல அரசியல்வாதிகளின் வெட்கங்கெட்ட தன்மைகளை, கடந்த காலங்களில் இதே தலைவர்களை கிண்டல் செய்யும் வீடியோ காட்சிகள் மூலமாக இந்த நாட்களில் சமூக ஊடகங்கள் அம்பலப்படுத்துகின்றன.

இந்தப் பின்னணியில்தான், ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி (Samagi Jana Balawegaya - SJB) இலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு (UNP) கட்சி தாவியதை ஒகஸ்ட் 9 அன்று உயர் நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்கியது. இதனால், அவர்கள் தமது பாராளுமன்ற ஆசனங்களையும், அதன் விளைவாக அவர்கள் வகித்த அமைச்சுப் பதவிகளையும் இழந்துள்ளனர். ஆனாலும், அவர்கள் இன்னமும் ஒழுக்கமான உயர்ந்த இடத்தைக் கோர முயற்சிக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், கட்சித்தாவலைத் தடுப்பதற்கு கட்டாயமாக புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி (National People's Power - NPP)) மட்டுமே கருதுகின்றது. அரசியல்வாதிகள் ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு தாவுவதைத் தடுக்கும் ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளன. ஆனால் கட்சி மாறியவர்களில் பலர் சட்ட நுட்பமான காரணங்களினால் கட்சி மாறிய பின்னர் கடந்த காலங்களில் தப்பிப்பிழைத்துள்ளனர்.

கட்சித்தாவல் செயற்பாடுகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளை சட்ட ரீதியாக அல்லது நேர்மாறான வகையில்



சவாலுக்கு உட்படுத்தப்படும்போது, அவற்றைத் தார்மீக ரீதியாக நியாயப்படுத்த முயற்சிப்பதால், இலங்கையில் நீண்டகாலமாக கட்சித்தாவல் சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது.

அரசியல்வாதிகளின் கட்சிவிலகலின் நன்மை அல்லது தீமையைத் தீர்மானிக்கும்போது சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் தனிப்பட்ட கணிப்பு மற்றும் மனச்சாட்சி, கட்சியின் உள்ளக ஒழுக்கம், மக்களின் ஆணை உள்ளிட்ட பல முக்கியமான பிரச்சினைகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் முதலாவதும் விகிதாசார பிரதிநிதித்துவத்திற்கு முந்தையதுமான தேர்தல் முறை அமுலில் இருந்தபோது, கட்சி ஒழுக்கத்தை விட மனச்சாட்சி முன்னுரிமை பெற்றிருந்தது. ஆனால் 1978 இல் விகிதாசார பிரதிநிதித்துவ (Proportional Representation -PR) முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அதற்கு மாறாக கட்சி ஒழுக்கம் முன்னுரிமை பெறுகின்றது.

அரசியல்வாதிகளின் கட்சித் தாவலின் நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்த பொதுமக்களின் கருத்து, அக்காலகட்டத்து அரசியல் சூழ்நிலையைப் பொறுத்து பல ஆண்டுகாலமாக மாறியுள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிர்வாகத்தின் போது மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதார சுமைகளுடன் இணைந்த அத்துமீறிய நடவடிக்கைகளால் விரக்தியடைந்து, கட்சித் தாவல் ஆதரவு மனப்பான்மை மேலோங்கி இருந்தது. ஒரு சில ஆளும் கட்சி எம்.பி.க்களாவது அரசுக்கு எதிராக நிற்க வேண்டும் என்று மக்கள் விரும்பினர். பிரேமதாச நிர்வாகத்தின் போது, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைமையிலான கிளர்ச்சியை நசுக்குவதற்காக ஒரு கொலைவெறி வடிவில் அரச பயங்கரவாதம் முன்னெடுக்கப்படதன் காரணமாக, இது (கட்சித் தாவல் ஆதரவு மனப்பான்மை) மேலும் வலுப்பெற்றது.

அப்போது, ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் தங்கள் மனசாட்சியின்படி செயற்பட்டு, ஆளும் கட்சியுடனான தொடர்பைத் துண்டிக்க வேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள். இந்த சிந்தனைப் போக்கில் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்தன. அதனால் 1991 ஆம் ஆண்டு பிரேமதாச அரசாங்கத்தில் இருந்து லலித் அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்கா, மற்றும் பலரும் வெளியேறியமை பலராலும் வரவேற்கப்பட்டது. எனினும், கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை அரசியல்வாதிகள் அதிகாரத்திற்காகவும் சலுகைகளுக்காகவும் குத்துக்கரணமடிக்கும் அசிங்கமான மற்றும் வெட்கக்கேடான சம்பவங்கள் பொதுமக்களின் கருத்தை சமீப காலத்தில் மாற்றியுள்ளன.

கட்சிகளை மாற்றுவது அல்லது இன்னுமொரு கட்சியை உருவாக்குவதற்கு ஒரு கட்சியை கைவிடுவது எப்போதும் சந்தர்ப்பவாதம்

அல்லது பேராசையால் தூண்டப்படுவதில்லை. தங்கள் கட்சியுடனான பிணைப்பில் கோடிக்கணக்கான மக்களின் மனங்கள் மாறுவதால் ஆட்சி மாற்றங்கள் எப்போதும் நடக்கின்றன. இது சந்தர்ப்பவாதம் அல்ல. அரசியல் வரலாறு இப்படித்தான் வெளிப்படுகின்றது. அதேபோல், அரசியல்வாதிகளும் ஒரு கட்சியைக் கைவிட்டு இன்னொரு கட்சியில் சேரலாம் அல்லது மற்றொரு கட்சியை உருவாக்கலாம். இருப்பினும், இந்த செயலின் மதிப்பு எதிர்வரும் காலங்களில் அவர்கள் காட்டும் நேர்மை மற்றும் நாணயத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.


உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கும், இணையப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தும் ஒழுங்குவிதிகள் போன்ற தொகையானதொரு அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வருவதற்கும், அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிராகரித்து தற்போதைய அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதற்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டால், அதனை சந்தர்ப்பவாதமாக கருத முடியாது. இருப்பினும், மீண்டும், அடுத்து வரும் சில மாதங்கள் அல்லது ஆண்டுகளில் அவரது நடத்தையால் மட்டுமே, அவரது செயலின் நேர்மை நிரூபிக்கப்படும்.

இலங்கையில் 95 சதவீதத்திற்கும் அதிகமான கட்சி தாவல்கள் அப்பட்டமான சந்தர்ப்பவாதத்தாலும் அதிகாரம் மற்றும் சலுகைகளுக்கான பேராசையாலும் தூண்டப்படுகின்றன. கட்சித் தாவல்களில் மட்டுமன்றி, சந்தர்ப்பவாதமும் பேராசையும் நாட்டின் அன்றாட அரசியலை ஆளும் அடிப்படை விதிகள். மக்கள் அவற்றைப் பின்பற்றாத அளவுக்கு தார்மீக ரீதியில் வலுவாக இருந்தால் மட்டுமே, இதனைத் தடுத்து நிறுத்த முடியும்.

நன்றி: டெய்லிமிரர், ஆசிரியர் தலையங்கம், 13 ஒகஸ்ட் 2024

**தமிழில்: வானவில்**

# முதலாளித்துவத்தின் தேவை



**ந**வம்பரில் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்வு செய்வதற்கான உட்கட்சி பிரச்சாரம் முடிவுற்று, வேட்பாளர்கள் ஒருவாறாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் இருப்பது இரண்டே கட்சிகள். ஒன்று, ஜனநாயகக்கட்சி. மற்றொன்று குடியரசுக்கட்சி. இம்முறை இரு கட்சிகளும் உட்கட்சி ஜனநாயகத்தைக் கைவிட்டு, குறிப்பிட்ட ஒரு நபரை மட்டுமே முன்நிறுத்தியுள்ளன.

ஜனநாயகக்கட்சி, தனது ஜனாதிபதி வேட்பாளராக முதலில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனையே முன்னிறுத்தியிருந்தது. பின்னர் ஜனநாயகக்கட்சிக்குள் இடம்பெற்ற சதியொன்றின் மூலம், பைடன் அகற்றப்பட்டு, தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஜனநாயகக்கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். அவர் தனது கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக ரிம் வால்ஸ் என்பவரை அறிவித்துள்ளார்.

குடியரசு கட்சி தனது வேட்பாளராக முந்தைய ஜனாதிபதி டொனால்டு டிரம்பை முன்னிறுத்தியுள்ளது. டொனால்டு டிரம்ப் மற்றும் கமலா ஹரிஸ் கடைந்தெடுத்த முதலாளித்துவ ஆட்சியாளர்கள்தான். இருவருமே அந்நாட்டு மக்களுக்கும் உலக மக்களுக்கும் தீமைகளைத் தவிர, வேறு எதனையும் பரிசளிக்கப் போவதில்லை. இருவரது பிரச்சாரத்திலும், ஒருவருக்கொருவர் தாக்கிப் பேசிக் கொண்டதோடு தேர்தல் பரப்புரை கூட்டங்களையே இழிவுகளின் உச்சத்திற்கு கொண்டு செல்கின்றனர்.

இதற்கிடையே டிரம்ப், பென்சில்வேனியாவில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த போது, அவர் மீது துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. அவரது காதில் காயம் ஏற்பட்டுள்ளது. சம்பவத்தின் பின்னர் ஒருநாள் கூட விசாரணை நடக்கவில்லை, அதற்கு முன்பே டிரம்ப் மீது நடந்த தாக்குதலுக்கு ஈரான் அரசுதான் காரணம் என பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்து பதற்றத்தையும் தூண்டியுள்ளனர்.

இது ஒருபுறம் இருக்க, டிரம்ப் தனது கட்சியின் துணை ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராக ஜெ.டி.வான்ஸ் என்பவரை தேர்வு செய்துள்ளார். இந்த நபர் குடியரசுக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். டிரம்ப்புக்கு மிக நெருக்கமானவர். அது மட்டுமல்ல, இஸ்ரேலின் தீவிர யூத வெறிக்கு மிகப்பெரும் ஆதரவு அளிப்பதாக பகிரங்கமாக அறிவித்தவர். பலஸ்தீனர்களை கொன்று குவிக்கும் இஸ்ரேலின் போர் வெறிக்கு முழு ஆதரவு வழங்குபவர். அத்தோடு, அவர் அதிதீவிர வலதுசாரி பாசிச கும்பல்களின் ஆதரவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா தொடங்கி இந்தியா வரை தேர்தல்களில் வலதுசாரிகளும், அதிதீவிர வலதுசாரிகளும் பிரதான இடம் பெறுகின்றனர். மாற்று சக்தியாக வேறு எவரையும் தேர்ந்தெடுக்க முடியாதபடி, இரண்டில் ஏதேனும் ஒரு தீமையை தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு முறை மக்களுக்கு அளிக்கிறது. உலகின் செல்வங்கள் அனைத்தையும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரத் துடிக்கும் பெரும் கோர்ப்பரேட் முதலாளிகள், 'மெகா' கோடீஸ்வரர்கள் தங்களுக்கு ஏற்ற ஆட்சியாளர்களையே தேர்ந்தெடுக்கச் செய்ய வேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளனர்.

இன்றைய முதலாளித்துவத்திற்கு கொடூர குணமும், மத, இனவெறியும், தீவிர கோர்ப்பரேட் சேவகமும் ஒருங்கே அமையப் பெற்ற நவீன பாசிச ஆட்சியாளர்களே தேவை. அதைத்தான் மீண்டும் டிரம்பின் வருகையும் அவரது துணை ஜனாதிபதி வேட்பாளராக அதி தீவிர வலதுசாரி ஒருவர் முன்னிறுத்தப்படுவதும் காட்டுகின்றன.

# சி.டி.குரியன்: பொருளியல் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கான இந்திய வழிகாட்டி

‘எதை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது?’ பொருளாதாரத்துக்கு ஆணிவேராக விளங்கும் இந்த மூன்று கேள்விகளில் இருந்து பிறப்பவையே கோட்பாடுகள். இந்தக் கோட்பாடுகளை முற்றிலுமாக அலசி ஆராய்ந்து, ‘யாருக்கு எது சொந்தம்? யார் என்ன செய்கிறார்கள்? யாருக்கு என்ன கிடைக்கிறது?’ என்று அதற்கு மாற்றான மூன்று கேள்விகளை உருவாக்கி, சமூகத்தைச் சிந்திக்கத் தூண்டியவர், இக்கேள்விகளுக்கு விடை தேடும்படி தன் மாணவர்களை ஊக்குவித்தவர், கிறிஸ்தோபர் தோமஸ் குரியன் (Christopher Thomas Kurien) என்கின்ற சி.டி.குரியன்.

அப்படி விடைகளைத் தேடிய அவரது மாணவர்கள் பலர் இன்றைக்கு அரசியல் தலைவர்களாகவும் பொருளாதார நிபுணர்களாகவும் வளர்ந்து நாட்டுக்குப் பங்களிப்பு செய்துவருகின்றனர். அவர்களது பொருளியல் ஆசானாகிய சி.டி.குரியன் கடந்த 23.7.2024 அன்று தனது 93 ஆம் வயதில் மறைந்தார்.

**பொருளாதாரச் சுதந்திரம்**

இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தபோது பள்ளிப் பருவத்தைக் கடக்கும் நிலையை குரியன் எட்டியிருந்தார். தமது நாட்டுக்குக் கிடைத்திருப்பது அரசியல் சுதந்திரமே என்கிற புரிதல் அந்த இளம் வயதிலேயே குரியனுக்கு இருந்திருக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரர்களின் அடுத்த கனவு, பொருளாதார சுதந்திரம் என்பதை நேருவின் சுதந்திர தின உரையின் வழியாக குரியன் உணர்ந்தார்.

இதனால், பொருளாதாரம் படிக்க வேண்டும் என்கிற முடிவை எடுத்திருக்கிறார். பொருளாதாரச் சுதந்திரம் என்பதில், வறுமையில் இருந்து விடுதலை அல்லது வறுமையைப் போக்குவது என்பதைத் தனது இலட்சியமாகக் கொள்கிறார். சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்ந்து, முதுகலைப் பொருளாதாரம் கற்றுத் தேறினார் குரியன்.

1958 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் ஸ்ரான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் (Stanford University) முனைவர் பட்ட ஆய்வுக்காகச் சேர்ந்தார். அந்தப் பல்கலைக்கழகம், நோபல் பரிசு பெற்ற கென்னத் அரோ (Kenneth Arrow)



போன்ற நவசெவ்வியல் பொருளியல் அறிஞர்கள் நிரம்பிய, பொருளாதாரப் பல்கலைக்கழமாகத் திகழ்ந்தது.

**கோட்பாடுகளின் போதாமை**

உபரி விநியோகத்தை (surplus supply) நவசெவ்வியல் கோட்பாடுகள் (Neoclassical theories) பூச்சியமாகக் கருதின. எந்த ஒரு பொருளும் தேவைக்கு மேல் உபரியாக இருந்தால், அதன் மதிப்பு பூச்சியம் என நவசெவ்வியல் கோட்பாடுகள் வரையறுத்தன. இதனை குரியனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதேபோல் உழைப்பின் பாத்திரத்தைக் கணக்கிடுவதில் நவசெவ்வியல், செவ்வியல் கோட்பாடுகள் (Classical theories) பற்றாக்குறையாக இருப்பதாக முடிவுக்கு வந்தார்.

*நா.மணி*

குறைந்தபட்ச வாழ்வாதாரக் கூலி, இருத்தலுக்கான கூலி, உழைப்பின் சந்தை விலை போன்ற உழைப்பு சார்ந்த பல்வேறு கோட்பாடுகளை அவர் ஏற்கவில்லை. உபரி உழைப்பு (surplus wage) என்பதை இந்தியப் பாணியில் எப்படி அணுகுவது என்பதே அவரது முனைவர் பட்ட ஆய்வின் உள்ளடக்கமாக இருந்தது.

1963 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து, தான் படித்த சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் (Madras Christian College) ஆசிரியர் பணியைத் தொடங்கினார். அப்போது ‘வளர்ச்சி குன்றிய பொருளாதாரங்களில் உற்பத்திக் காரணிகளின் ஒதுக்கீட்டில் சில சிக்கல்கள்’ என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் குரியன் சமர்ப்பித்தார்.

அதன் வழியாக, நவசெவ்வியல் கோட்பாடுகளில், வளங்களின் ஒதுக்கீட்டுக்கான போதாமையைச் சுட்டிக்காட்டினார். இதனையே தனக்கு ஆசிரியராக இருந்த நோபல் பரிசுபெற்ற கென்னத் அரோவுக்கு ஒரு கடிதமாக எழுதினார். இந்தக் கடித உரையாடல்களின் முடிவில், கென்னத் அரோ ‘கூலி பற்றிக் கறாராகப் பேசினால், சமநிலைக் கூலி என்ற ஒன்று இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன்’ என்று ஒப்புக்கொண்டார்.

முதன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகளை நன்கு கற்றுத் தேறிய குரியன், அது இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஏற்ற தீர்வைத் தர இயலாது என்ற முடிவுக்கு வருகிறார். அது மட்டுமல்ல, பொருளியலின் முதன்மைக் கோட்பாடுகள், வறுமைக்கான தீர்வுகளை முன்வைக்கப் போதுமானதாக இல்லை என்பதையும் கற்றுத் தெளிகிறார். நுண்ணியல் (micro), பேரியல் (macro) உள்ளிட்ட பல கோட்பாடுகளில், ஓர் இணக்கமின்மை இருப்பதையும் அவர் கண்டுணர்கிறார்.

**புதிய இணைப்பு**

தான் கற்றுத் தேறியதையும், தனது ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்ததையும், தனது மாணவர்களிடம் கொண்டு சேர்த்தார். அதற்குப் பாடத்திட்டத்தில் ஒரு புதிய இணைப்பை உருவாக்கினார். இந்தியப் பொருளாதாரச் சிக்கல்கள் என்ற தலைப்பில் ஒரு புதிய பாடத்தை உருவாக்கினார்.

அதன் வழியாக, இந்தியப் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க, பொருளாதாரக் கோட்பாடுகள் திறனற்று இருப்பதை மாணவர்கள் உணரும்படி செய்தார். இதே காலகட்டத்தில், இந்தியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சியும் வளர்ச்சிப் பணிகளும் தொடங்கியிருந்தன. அப்போது இந்தியப் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க, இந்திய உழைப்பின் உபரியைப் புரிந்துகொள்ள, கூடுதல் பயிற்சியும் பார்வையும் வேண்டும் என்பதை குரியன் சுட்டிக்காட்டினார்.

அப்படியான அவரது பார்வையின் அடிப்படையில், இந்தியக் கிராமப்புற உழைப்பாளி மக்களுக்கு வேலை உத்தரவாதச் சட்டம் ஒன்றின் தேவையை 1974 ஆம் ஆண்டிலேயே பரிந்துரை செய்தவர் குரியன். இன்றைய நூறு நாள் வேலைத் திட்டத்தின் முதல் குரல் அல்லது முதல் சிந்தனை குரியனுடையது என்று கூறலாம்.

**வளர்ச்சியும் வறுமையும்**

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டமிடுதல், வறுமை ஒழிப்புக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தது. பொருளாதார வளர்ச்சியை அதிகரித்து, வறுமையை ஒழிக்க முடியும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. எது வளர்ச்சி என்பதைப் பற்றிய குரியனின் மதிப்பீடு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

பொருளாதார வளர்ச்சி என்பது, சொத்துடைமைக்கு ஏற்றாற்போலவே அதிகரிக்கும். வளர்ச்சியின் பயன்கள் சமமாகச் சென்று சேராது. இதன் காரணமாகச் சிலரது வளர்ச்சி பன்மடங்கு அதிகரிக்கும். பலரது வாழ்க்கையில் வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும் என்று கணித்தார்.

குரியனின் மிகப்பெரிய கண்டறிதல் என அவரே கருதுவது, ‘பெரிய பெரிய பொருளாதாரக் கோட்பாடுகள் இன்றி, உற்பத்தியின் பகிர்வையும், வளங்களின் பங்கீட்டையும் திறம்படக் கட்டுப்படுத்தி, சமனற்ற வளர்ச்சியைக் குறைக்க முடியும்’ என்கிற முடிவுக்கு வந்தது.

நாட்டில் நிலவும் சந்தையில்லாப் பரிவர்த்தனை, பொருளியல் கோட்பாடுகளைப் பயனற்றுப் போகச் செய்கிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். இதன் காரணமாக, ‘உண்மையான வாழ்க்கை சார்ந்த பொருளாதாரம்’ (Real life Economics) என்கிற மாற்று அணுகுமுறையைக் கையாள நேரிட்டதாக குரியன் கூறுகிறார்.

இவ்வாறு, மாற்று அணுகுமுறைகளைக் கையாண்டு, தனது ஆயுள்காலம் முழுவதும், வறுமை, திட்டமிடல், சமூக மாற்றம், தமிழ்நாட்டின் கிராமப்புற மாறுதல்கள், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வந்தார். மால்கம் ஆதிசேஷய்யா சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தைத் (The Madras Institute of Development Studies founded by Malcolm Adiseshiah) தொடங்கியபோது, 1978 ஆம் ஆண்டு முதல் அதன் இயக்குநராகப் பொறுப்பேற்றார் குரியன்.

அதன் பின்னர், பல்கலைக்கழக மானியக் குழு, இந்திய சமூக அறிவியல் கழகம் ஆகியவற்றில் மதிப்புறு பேராசிரியராக விளங்கினார். தனது 72 ஆவது வயதில் கல்விசார் பணிகளில் இருந்து விடைபெற்றார். அதன் பின்னர், நூல் மதிப்புரைகள் எழுதுவதையும், புத்தகங்கள் எழுதுவதையும் தனது கடமையாகச் செய்துவந்தார்.

பொருளியல் மாணவராகத் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி, மாற்றுப் பொருளியல் சிந்தனையுடன், பொருளியல் பிரச்சினைகளைத் தீர்க்க மாற்று அணுகுமுறைகளை ஆராய்ந்து கண்டறிந்த சி.டி.குரியனின் வாழ்க்கை, மகத்தான ஒன்று. அவர் படைத்தளித்த ஒவ்வொரு நூலும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவர் இறுதியாக 2018 ஆம் ஆண்டில் கொண்டுவந்த Economics of Real life: A New Exposition என்ற நூல் சமகால இந்தியப் பொருளாதாரத்தை எப்படிக் கற்றுக்கொள்ள வேண்டும், கற்பிக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த ஒரு பங்களிப்பு.

அந்தப் புத்தகத்தினை கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பாடமாக வைப்பதன் மூலம் அவரது உழைப்பின் சாரத்தை வருங்காலத் தலைமுறை பயன்படுத்திக்கொள்ள முடியும். அவரது நினைவாக இந்தப் பணியை தமிழ்நாடு அரசின் உயர் கல்வித் துறை, தனது உயர் கல்வி நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்யலாம். மாணவர்கள், ஆசிரியர்கள், கோட்பாட்டாளர்கள், குடிமைச் சமூகம், கொள்கை வகுப்பாளர்கள் என அனைவரும் அவரைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**நன்றி: இந்து தமிழ் திசை (30–07–2024)**

## உலகளவில் 4 கோடி பேர் ‘எச்.ஐ.வி’யால் பாதிப்பு, நிமிடத்திற்கு ஒருவர் மரணம்

உலகம் முழுவதும் 2023 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 4 கோடி மக்கள் ‘எச்.ஐ.வி’ (HIV) பாதிப்புடன் வாழ்ந்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும் இதில் 90 இலட்சம் பேர் சிகிச்சை பெறவில்லை எனவும் சிகிச்சை பெறாத காரணத்தால் ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் மரணமடைகிறார் எனவும் தெரிய வந்துள்ளது.

25 ஆவது சர்வதேச ‘எச்.ஐ.வி’ மாநாடு ஜெர்மனியில் காணொலி வாயிலாக நடைபெற்றது. இந்த மாநாடு ஜூலை 26 அன்று நிறைவடைந்தது. மாநாட்டையொட்டி ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில் 2023 ஆம் ஆண்டில் மட்டும் எய்ட்ஸ் (AIDS) தொடர்பான நோய்களால் சுமார் 6 இலட்சத்து 30 ஆயிரம் பேர் இறந்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.

உலகம் முழுவதும் ‘எச்.ஐ.வி’ பரவலை கட்டுப்படுத்த ஐ.நா அவை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. இச்சூழலில் மத்திய கிழக்கு, வட ஆப்பிரிக்கா, கிழக்கு ஐரோப்பா, மத்திய ஆசியா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் ‘எச்.ஐ.வி’ கட்டுப்படுத்தப்படுவது குறைந்து விட்டது என ஐ.நா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு 45 சதவீதமாக இருந்த ‘எச்.ஐ.வி’ தொற்று ஊசி மூலம் போதை மருந்துகளை எடுத்துக்கொள்வது, பாதுகாப்பற்ற பாலியல் உறவு உள்ளிட்ட காரணங்களால் 2023 ஆம் ஆண்டு 55 சதவீதமாக அதிகரித்துள்ளது. உலகம் முழுவதும் விளிம்பு நிலை மக்கள் மத்தியில் தான் இந்த பாதிப்பு அதிகமாக உள்ளது.

‘எச்.ஐ.வி’ அற்ற உலகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இயங்கி வரும் ‘எச்.ஐ.வி’/எய்ட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டுத் திட்ட (UNAIDS) அமைப்பின் நியூயார்க் அலுவலகத்தின் இயக்குநர் சீசர் பேசும் போது “எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போடப்படும் இரண்டு டோஸ் ஊசிக்கு ஒவ்வொரு ஆண்டும் 33 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் (40,000 டொலர்கள்) செலவாகும்.” இதன் காரணமாக பணக்காரர்கள் மட்டுமே மருந்து எடுத்துக்கொள்ள முடியும். பாதிக்கப்பட்டுள்ள விளிம்பு நிலை மக்கள் யாரும் மருந்துகளை எடுக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள மக்கள் கடுமையான பாதிப்பைச் சந்திப்பார்கள். இதனை கருத்தில் கொண்டு மருந்துகள் குறைந்த விலையில் கிடைக்குமாறு உற்பத்தியாளரிடம் ‘எச்.ஐ.வி’/எய்ட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கூட்டுத் திட்ட அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

---

எங்கெல்ஸ் தொழிலாளர் வர்க்கம் தன்னை அறிந்து கொள்ளவும், தன்னுணர்வோடு இருக்கவும் கற்றுக் கொடுத்தார். அவர் கனவுகளின் இடத்தில் அறிவியலை வைத்தார். – லெனின்

# செப்ரெம்பர் தேர்தல், பிரச்சினைகள் மற்றும் பிரச்சாரங்கள்



இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது நாடு வங்குரோத்து நிலையை அறிவித்த பின்னர், நீண்ட காலத்தின் பின்னர் தேர்தல் நடைபெறும் நிலையில் உள்ளோம். நிதிப் பற்றாக்குறை காரணமாக ஜனாதிபதி தேர்தல், உள்ளூராட்சி தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் எல்லாமே பின்போடப்பட்டு இருந்தன.

தேர்தல்கள் பல காரணங்களுக்காக முக்கியமானவை. மக்களின் வாக்குகளின் மூலமே முன்னர் வீழ்ச்சிக்கு உள்ளாகியிருந்த பொருளாதாரத்தை நிமிர்த்த எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றிய அவர்களின் கருத்தை அறிந்து கொள்ள முடியும். சர்வதேச நாணய நிதியத்தின் (International Monetary Fund) ஆணைப்படி மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் மக்களை கடுமையான நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

வருமானத்தின் மீதான வரி அதிகரிப்பும், மருந்துப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வை அதிகரிப்பும், புற்றுநோய் மற்றும் இருதய சிகிச்சைகளுக்கான மருந்துகள் உட்பட பல அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராயும் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட (Gamini Waleboda), கடந்த வருடம் 1,069,000 மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார். எல்லாப் பொருட்களின் விலைகளும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன.

அதே நேரத்தில், அரச சேவையில் சம்பளங்கள் நிலையாக இருந்தாலும், வர்த்தகத்துறையில் குறைப்பு ஏற்பட்டுள்ளது. மக்களில் பெரும் பகுதியினர் வறுமையில் வாழ்வது ஆச்சரியமான விடயமல்ல. உலக வங்கி (World Bank) தரவுகளின்படி, சனத்தொகையில் 25.9 சத வீதத்தினர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். மருந்துகளின் விலையுயர்வும், வைத்தியசாலைத் தேவைகளும் அரசாங்க வைத்தியசாலைகளில் இட நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. பல சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைகளில் இரண்டு நோயாளிகள் ஒரே கட்டிலைப் பகிர வேண்டிய நிலை உருவாகின்றது.

அதே வேளையில், சர்வதேச நாணய நிதியம் வழங்கிய 2.9 பில்லியன் டொலர்கள் உதவியின் மூலமும், இந்தியா வழங்கிய 4 பில்லியன் கடன் உதவி மூலமும், பொருளாதாரத்தை மீட்சிப் பாதையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இட்டுச் செல்வதாக புகழாரம் சூட்டப்படுகிறது. கடுமையான உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள், சமையல் வாயு, மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் 12 மணி நேர மின்வெட்டு என்பன காரணமாக வங்குரோத்து நிலையை அறிவித்திருந்த நாடு, அதிலிருந்து மீண்டு வருகிறது. ஆனால் துரதிருஸ்டவசமாக இவைகள் எல்லாம் இருந்த போதிலும், பல மக்கள் இவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொருளாதார நிலையில் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான நான்கு வேட்பாளர்களாக ஜனாதிபதி விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சிறிய அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு சார்பிலான அனுர குமார திசாநாயக்க ஆகியோருடன், சிறீலங்கா பெரமுனவைச் சேர்ந்த நாமல் ராஜபக்ச என்ற பையனும் (Boy) போட்டியிடுகின்றனர்.

தேர்தல்கள் ஆணையம் வழங்கியுள்ள தகவலின்படி, எதிர்வரும் தேரதல்களில் 1,100,000 இளம் வாக்காளர்கள் புதிதாக வாக்களிக்கவுள்ளனர். இளம் வாக்காளர்கள் பழைய முகங்களே நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணம் எனக் கருதுவதால் அவர்கள் மீது அதிருப்தியுடன் உள்ளனர். அவர்களே ஊழல் மற்றும் மோசடிகளுக்கு காரணமானவர்கள் என அந்த இளம் புதிய வாக்காளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே, பொதுவாக அவர்கள் இளம் வேட்பாளர்களையே விரும்புகின்றனர்.

ஆனால், இளம் வேட்பாளரான நாமல் ராஜபக்ச ஊழலுக்காகவும், நாட்டின் வளங்களைச் சீரழித்ததிற்காகவும் குற்றம் சாட்டப்பட்ட குடும்பத்திலிருந்து வந்திருக்கிறார். இந்தக் கருத்து எதிர்வரும் தேர்தலில் அவருக்கு ஒரு பாரிய அச்சுறுத்தலாக இருக்கும்.

போட்டியில் முன்னணியில் இருக்கும் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவராக நோக்கப்பட்ட போதிலும், தற்பொழுது புதிதாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் அவரது கதவைத் தட்டக்கூடும்.

எப்படியிருந்த போதிலும், பிரேமதாசவோ அல்லது அனுர குமார திசாநாயக்கவோ சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்புக்குள் தற்போதைய பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பார்கள் என்ற திட்டத்தை மக்கள் முன்னால் வைக்க வேண்டியிருக்கும். மக்களுடைய துன்பங்களைக் குறைப்போம் என அவர்கள் கூறி வருகின்ற போதும், எவ்வாறு அதைச் சாதிப்பார்கள் என்பதை அவர்கள் இதுவரை தெரிவிக்கவில்லை.

எமது அரசியல் கட்டமைப்பில் உள்ள

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# தேசிய இனப்பிரச்சினையில் முதலாளித்துவக் கண்ணோட்டமும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டமும்

ஒரு ஒடுக்குமுறை நிலவும் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட இனங்களில் முதலாளி வர்க்கம் முதல் பாட்டாளி வர்க்கம் வரை பலவித வர்க்கங்களும் ஒடுக்கு முறைக்கு உள்ளாகின்றன. முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் இருவேறு நலன்களிலிருந்து இப்பிரச்சினையை அணுகுகின்றன.

தத்தமது வர்க்க நிலைப்பாட்டு நோக்கில் இதற்கான தீர்வுகளை முன் வைக்கின்றன.

1. எல்லாத் தேசிய விருப்பங்களையும் ஆதரிப்பதுதான் செயல் பூர்வமானது என பூர்ஷ்வா வர்க்கம் கூறுகிறது. ஆனால் பாட்டாளி வர்க்கம் தேசிய இனப் பிரச்சினையில் பூர்ஷ்வாக்களின் எல்லாக் கோரிக்கைகளையும் ஆதரிப்பதில்லை. தேசிய அமைதியைப் பெறுவதற்காக (இந்த அமைதியை பூர்ஷ்வாக்களால் பூரணமாக ஏற்படுத்த முடியாது. முழு ஜனநாயகம் மூலமே அடைய முடியும்). சம உரிமைகள் பெறவேண்டி, வர்க்கப் போராட்டத்திற்குச் சிறந்த நிலைமைகள் தோற்றுவிக்க வேண்டி, தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வாக்களை இப்பிரச்சினையில் ஆதரிக்கிறது.

2. தமது தேசிய இனத்திற்கு விஷேச உரிமைகள், விஷேச ஆதாயங்கள் – இவைதாம் பூர்ஷ்வாவர்க்கம் தேசிய இனப் பிரச்சினையில் அடைய விரும்புவது. பாட்டாளி வர்க்கம் எந்த இனமாயினும், அது ஒடுக்கும் இனமாயினும் ஒடுக்கப்பட்ட இனமாயினும் விஷேச உரிமைகள் தனிச் சலுகைகள் அனைத்தையும் எதிர்க்கிறது.

3. பூர்ஷ்வா வர்க்கம் தனது தேசியக் கோரிக்கைகளுக்கு எப்போதும் முதலிடம் அளிக்கிறது. தமது சொந்த இனத்துக் குறிக்கோள்களைக் பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள்களுக்கு மேலானதாக வைத்து அந்த வர்க்கத்து வளர்ச்சியைத் தடைசெய்யப் பார்க்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையான பாத்திரத்தைத் தனது தேசியக் கோரிக்கைகளுக்குக் கீழ்ப் பட்டவைதாம் என வாதிடுகிறது.

ஜனநாயகப் புரட்சியானது ஒடுக்கப்பட்ட தேசிய இனம் ஒடுக்கும் இனத்திலிருந்து பிரிந்து போவதில் முடியுமா அதனுடன் சம அந்தஸ்து



தோழர் ஏ.எம்.கோதண்டராமன்

பெறுவதில் முடியுமா என முன்கூட்டியே கூற முடியாது. முடிவு இரண்டில் எது வானாலும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் தனது வர்க்கத்தின் வளர்ச்சிக்கு வழி செய்வது தான் பாட்டாளி வர்க்கத்துக்கு முக்கியமானது. ஆகவே பாட்டாளி வர்க்கம் எந்த இனத்திற்கும் உத்திரவாதம் அளிக்காமல் இன்னொரு தேசிய இனத்திற்குப் பாதகமான முறையில் எதையும் செய்யாமல் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற எதிர்மறைக் கோரிக்கையுடன் நிறுத்திக் கொள்கிறது.

4. எந்த ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் மற்ற தேசிய இனங்களின் நிலைமை (அல்லது அவர்களுக்கு நேரக்கூடிய பாதகம்) எதுவாயினும் தனது சொந்த நலன்களுக்கு வேண்டிய உத்திரவாதங்கள் மட்டும் தான் தேவை. பாட்டாளி வர்க்கத்திற்கு அனைத்து இனங்களின் சமத்துவமும் அனைத்து இனங்களின் விடுதலையுமே குறிக்கோள். சுயநிர்ணய உரிமை என்ற தீர்வுதான் மிகவும் ஜனநாயகமான தீர்வைப் பெற சிறந்த உத்திரவாதமளிக்கிறது. வேறு எந்தக் குறிப்பிட்ட வளர்ச்சிப் பாதையைப் பற்றியும் உத்திரவாதமளிக்க முடியாது. ஏனெனில் சாத்தியமான எல்லாப் பாதைகள் வழியாகவும் பாட்டாளி வர்க்கம் தனது வர்க்க இலட்சியத்தை நோக்கி நடை போடுகிறது.

5. பூர்ஷ்வாக்கள் பாட்டாளிகளுக்குக் குந்தகமான முறையில் பிற தேசிய இனப் பூர்ஷ்வாக்களுடன் உடன்பாட்டுக்கு வரத் தயாராக இருப்பார்கள். ஆனால் தமது இனப் பாட்டாளி வர்க்கம் மட்டும் தனது இனப் பதாகையின் கீழ்தான் அணிதிரள வேண்டும், பிற இனப் பாட்டாளிகளுடன் ஒன்றுபடக்கூடாது என்பது பூர்ஷ்வாக்களின் நிலை. ஒரு முதலாளியுடன் வேறொரு இன முதலாளிக்குள்ள முரணபாட்டில் அவர்களது கருவியாக செயல்பட பாட்டாளி வர்க்கம் தயாரில்லை.

தேசிய ஒடுக்குமுறைகளை விட்டுக் கொடுக்காது எதிர்க்கின்ற அதே நேரத்தில் பூர்ஷ்வாக்களுக்கெதிராக அனைத்து இனப் பாட்டாளி வர்க்க ஒற்றுமையைப் பலப்படுத்தி முரண் பாடற்ற ஜனநாயகம், சோசலிசம் ஆகிய உணர்வுகளை ஊட்டுகிறது.

பாட்டாளி வர்க்கத்திற்கு ஜனநாயகப் புரட்சி முற்றுப்பெற வேண்டுமென்பது மட்டுமல்ல அந்த ஜனநாயகப் புரட்சி சோசலிச புரட்சிக்கு அஸ்திவாரமாக விளங்கவும் வேண்டும்.

அனைத்து இனப் பாட்டாளிகளையும் ஒன்றுபடுத்துவதற்காகப் பூர்ஷ்வாக்களின் சதிகளையும் தனித்துவப் போக்குகளையும் முறியடித்துச் சோசலிசத்தை நோக்கி முன்னேற உத்திரவாதமளிக்கிறது.

6. பூர்ஷ்வா வர்க்கத்திற்குப் பிற இனங்களின் மீதான அடக்குமுறையைப் பற்றிக் கவலையில்லை என்பது மட்டுமல்ல, தமது இனம் மீதான அடக்கு முறைக்குப் பிரிவினை, தனியரசு என்பது மட்டுமே ஒரே தீர்வாக முன் வைப்பர். ஒரு குறிப்பிட்ட இனம் பிரிந்து போவதற்குச் சரி என்று தெளிவாகப் பதில் சொல்லும்படியும் இதுதான் செயல்பூர்வ நடவடிக்கை எனவும் பூர்ஷ்வாக்கள் கூறுவர்.

ஒரு குறிப்பிட்ட இனம் பிரிந்து போவது சரி என்று சொல்வது தான் செயல்பூர்வமான தீர்வு எனக் கூறப்படுவதைப் பாட்டாளி வர்க்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. எல்லாத் தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகும் உரிமை உண்டு என மட்டும் அது கூறுகிறது. பாட்டாளி வர்க்கம் அனைத்து இனங்களினதும் விடுதலைக்காக நிற்கிறது. பிரிவினை மட்டுமே ஒரே தீர்வு என பாட்டாளி வர்க்கம் கருதவில்லை.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# பலஸ்தீன இயக்கங்களிடையே ஒற்றுமை ஒப்பந்தம்

பலஸ்தீனத்தின் முதன்மையான தேசிய விடுதலை இயக்கமான பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO), காஸா பகுதி போராளிகள் இயக்கமான ஹமாஸ் ஆகியவற்றுக்கு இடையே பல ஆண்டு காலமாக நீடித்து வந்த அதிகாரப் பகிர்வு மோதலையும், பிரிவினையையும் முடிவுக்கு கொண்டு வந்து, ஒற்றுமையை உருவாக்கி, சரித்திரம் படைத்துள்ளது மக்கள் சீனக் குடியரசு.

இஸ்ரேலும் அமெரிக்காவும் பலஸ்தீனத்தின் மீதான தங்கள் ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொள்ள, பிரதான பலஸ்தீன இயக்கங்களுக்கு இடையே இருந்த அதிகாரப் போட்டிகளையும் பயன்படுத்திக் கொண்டன.

இந்த இயக்கங்களுக்கு இடையேயான ஒற்றுமைக்காக பல ஆண்டு கால முயற்சிகள் நடந்து வந்துள்ளன. தற்போதைய உலகப் புவி அரசியல் சூழலில், இந்த வரலாற்றுத் தேவையை துல்லியமாக உணர்ந்து, பலஸ்தீன விடுதலை இயக்கம், ஹமாஸ் உள்ளிட்ட 14 பலஸ்தீன இயக்கங்களை ஒன்றிணைத்து சீன தலைநகர் பெய்ஜிங்கில் 3 நாட்கள் (ஜூலை 21–23) பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தது சீனக் குடியரசு. இதனைத் தொடர்ந்து, ஜூலை 23 அன்று பலஸ்தீன இயக்கங்களுக்கு இடையே நீடித்து வந்த அதிகார போட்டிக்கு முடிவுகட்டி, சீனாவின் அளப்பரிய அரசியல் துணிச்சல் மற்றும் இராஜதந்திர முயற்சிகளால் பலஸ்தீன பிரிவுகள் இடையே தேசிய ஒற்றுமை ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இந்த ஒற்றுமை ஒப்பந்தம் மூலம் பலஸ்தீன இயக்கங்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்த சீனா மேற்கொண்ட முயற்சிகளுக்கும், கடந்த பல ஆண்டுகளாக பலஸ்தீனத்திற்கு சீனா கொடுத்து வரும் ஆதரவு மற்றும் உதவிகளுக்கும் பலஸ்தீன விடுதலை அமைப்பின் துணைத்தலைவர் மஹ்மூத் அல்–அலௌல் (Mahmoud Al-Aloul) உணர்ச்சிப் பெருக்குடன் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் பலஸ்தீன தேசிய ஒற்றுமையை அடைவதற்கான ஆக்கப்பூர்வ முன்னேற்றம் என ஹமாஸின் அரசியல் தலைமைக் குழு



உறுப்பினர் ஹோசம் பத்ரன் (Hussam Badran) தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். போர் முடிவடைந்த பிறகு பலஸ்தீனத்தை கட்டமைப்பதற்கான சிறந்த மற்றும் மிகவும் பொருத்தமான தேசியத் தீர்வை இந்த ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்

இந்த ஒற்றுமை ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக, ஹமாஸ் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளும் பலஸ்தீன தேசியக் கூட்டணியின் சட்டப்பூர்வ பிரதிநிதியாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தை (பி.எல்.ஓ) ஒரு மனதாக ஏற்றுக்கொண்டுள்ளன. போர் முடிந்த பிறகு அல்–குத்ஸ் (Al-Quds) நகரை பலஸ்தீனத்தின் தலைநகராகக் கொண்டு சுதந்திர பாலஸ்தீன அரசை நிறுவுவதற்கும், பலஸ்தீன பிரிவுகள் மற்றும் பலஸ்தீன அதிகார சபையின் தலைவரின் ஒப்புதலுக்குப் பிறகு ஒரு இடைக்கால தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் இந்த ஒப்பந்தம் உறுதியளித்துள்ளது.

சொந்த நிலத்தில் இருந்து துரத்தப்பட்ட பலஸ்தீனர்கள் திரும்பி வருவதற்கான உரிமையை உறுதி செய்ய ஐ.நா. அவை தீர்மானம் 194 இன் படி இந்த ஒப்பந்தத்தில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டிற்கு திரும்பி வர விருப்பம் இல்லாதவர்களின் உணர்வை மதிக்கும் வகையில் அவர்கள் இழந்த சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும், இதனை சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவர பலஸ்தீன மக்களின் உரிமையையும், சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா. சாசனத்தின்படி கிடைக்கக்கூடிய அனைத்து வழிகளிலும் சுயநிர்ணய உரிமை மற்றும் அவர்களின் போராட்ட உரிமையும் இந்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### ஊடகங்கள் மறைப்பு

வழக்கம் போல, சர்வதேச ஊடகங்கள் சீனாவின் இந்த வரலாற்று முன்முயற்சி குறித்து பேசவில்லை. சாதாரண ஒப்பந்தமாக கடந்து, உலகின் அமைதிக்கான சீனாவின் இடைவிடா முயற்சியை உலகின் கண் முன் இருந்து மறைக்க முயன்றுள்ளன.

### அமைதியை நிலை நாட்டுவதில் புதிய மைல்கல்

இந்த ஒப்பந்தம் மூலம் மத்திய கிழக்கு பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டும் சர்வதேசக் கடமையை நிறைவேற்றுவதில் புதிய மைல் கல்லை சீனா எட்டியுள்ளது. கடந்த ஆண்டு ஈரான் மற்றும் சவூதி அரேபியாவிற்கு இடையே பல ஆண்டுகாலமாக நீடித்து வந்த பிரச்சனைகளை பேச்சுவார்த்தை மூலம் சீனா தீர்த்து வைத்தது என்பது

நினைவுகூரத்தக்கது.

இதனைக் கண்டு மத்திய கிழக்கு நாடுகள், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் பிரமித்துப் போயின. மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையே பிரிவினையைத் தூண்டி அந்த பிராந்தியத்தை அமெரிக்கா தனது ஆதிக்கம் நிறைந்த பகுதியாக வைத்திருக்கும் சூழலில் தனது துல்லியமான வெளியுறவுக்கொள்கை மூலம் சீனா அந்த பேச்சுவார்த்தையில் வெற்றி கண்டது. இது மத்திய கிழக்கில் அமைதியை கொண்டு வரும் முக்கிய முன்முயற்சியாக அமைந்தது.

இந்நிலையில், பலஸ்தீன இயக்கங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒற்றுமை ஒப்பந்தம் பலஸ்தீன – இஸ்ரேல் போரை முடிவுக்கு கொண்டு வருவதிலும் போருக்கு பிறகு பலஸ்தீன அரசை நிறுவும் பணியிலும் முக்கியப் பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் மூலம் பலஸ்தீன இயக்கங்களுக்குள் தீர்க்கமான ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டுள்ள சூழலில் ஒருங்கிணைத்த (ஒழுங்கமைக்கப்பட்ட) குழுவின் மூலமாக பேச்சுவார்த்தயை துரிதப்படுத்த முடியும்.

**பயணிக்க வேண்டிய தூரம் அதிகம்**

ஒற்றுமை ஒப்பந்தத்தின் வெற்றி, அனைவருக்கும் நம்பிக்கையை கொடுத்துள்ளது. பலஸ்தீனர்களுக்கான எதிர் காலத்தைக் கொடுத்துள்ளது என சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் குறிப்பிட்டுள்ளார். மேலும் “மத்திய கிழக்கில் ஒரே நாள் இரவில் அமைதியைக் கொண்டு வந்து விட முடியாது. சரியான பாதையில் பயணித்து அமைதியை அடைய நாம் இன்னும் வெகுதூரம் செல்லவேண்டும். அமைதிக்கான பாதையை நம்பிக்கை இழக்காமல் நாம் தொடர வேண்டும்” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**சர்வதேச சமூகத்தின் வரவேற்பு**

இந்த ஒற்றுமை ஒப்பந்தத்தை பலஸ்தீன ஆதரவு நாடுகள், அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளன. பலஸ்தீன ஒற்றுமையை உருவாகியுள்ள இந்த ஒப்பந்தத்தை ஐ.நா பொதுச்செயலாளர் அந்தோணியோ குட்டரெஸ் (António Guterres) பாராட்டி வரவேற்றுள்ளார். மேலும் “பலஸ்தீன ஒற்றுமையை உருவாக்குவதில் இது முக்கிய முன்னெடுப்பு. பேச்சுவார்த்தை மூலம் தங்களுக்குள் உள்ள வேறுபாடு களை கைவிட்டு ஒன்றிணைந்துள்ள பலஸ்தீன விடுதலை இயக்கங்கள் எடுத்துள்ள முடிவில் உறுதியாக நின்று நிறைவேற்ற வேண்டும்” என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய கிழக்கு அமைதி செயல்முறைக்கான ஐரோப்பிய ஒன்றிய சிறப்பு பிரதிநிதி ஸ்வென் கூப்மன்சும் இந்த உடன்பாட்டை வரவேற்றுள்ளார். “சீனாவின் இந்த அமைதி முன்முயற்சி குறிப்பிடத்தக்க சாதனை. மத்திய கிழக்கு பகுதிகளில் அமைதிக்கான சமாதான முன்னெடுப்புகளில் சீனா தனது நேர்மறையான மற்றும் ஆக்கப்பூர்வமான பங்கை முழுமையாக நிரூபிக்கிறது. ஐரோப்பிய ஒன்றியமும் சீனாவுடனான தொடர்பை மேலும் வலுப்படுத்த எதிர்நோக்குகின்றது” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மலேசியா, பாகிஸ்தான், துருக்கி, ஓமான், நாட்டின் தலைவர்களும் வெளியுறவுத்துறை அமைச்சர்களும் வரவேற்றுள்ளனர்.

**எந்தச் சூழலிலும் பலஸ்தீனர்களுக்கான ஆதரவு தொடரும்**

மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியை நிலைநாட்டும் சீன அரசின் வெளியுறவுக் கொள்கைகளை செயல்படுத்தி வரும் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ (Wang Yi), “சர்வதேச அரசியல் சூழல் எப்படி மாறினாலும் மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியை நிறுவவும், பலஸ்தீனர்களின் உரிமையை நிலைநாட்டவும் சீனா தொடர்ந்து செயல்படும்” என குறிப்பிட்டுள்ளார்.

“காஸாவில் தற்போது நடக்கும் போரால் மட்டும் பலஸ்தீனர்கள் பாதிக்கப்படவில்லை, வரலாற்று ரீதியாகவே அவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. அவர்களது நிலம் அவர்களுக்கு சொந்தமாக வேண்டும், அதை அவர்கள் வழிநடத்த வேண்டும், அவர்கள் ஆட்சி செய்ய வேண்டும். அது தான் வரலாற்று ரீதியாக அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை சரி செய்யும் வழி” எனவும் வாங் யீ குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஆதாரம்: பீப்பிள்ஸ் டெய்லி, பீப்பிள்ஸ் டிஸ்பாட்ச் (peoplesdispatch)

**தொகுப்பு: சேதுசிவன்**

# சந்திரனின் இரகசியம் சீனாவின் கையில்!

நிலவின் தென் துருவத்தில் இருந்து பாறைகள் மற்றும் மண்ணைக் கொண்டு வந்த சாங்'இ (Chang'e) கொள்கலன் திறக்கப்பட்டது.

சீன விண்வெளி தொழில்நுட்ப அகாடமியின் (China Academy of Space Technology - CAST) நிபுணர்களால் ஆய்வு கொள்கலனில் இருந்து மாதிரி பிரித்தெடுக்கப்பட்டது. பூமியில் இருந்து பார்க்க முடியாத நிலவின் தென் துருவமான ஐட்கன் படுகையில் இருந்து மாதிரிகளை சேகரிப்பதே சாங்'இ யின் பணியாக இருந்தது.

சாங்இ சேகரித்த மாதிரிகள் 1935.3 கிராம் எடையுள்ளவை என்றும் எதிர்பார்த்ததை விட அதிகமான மாதிரிகளை சேகரிக்க முடிந்ததாகவும் சீனாவின் தேசிய விண்வெளி நிறுவனம் (China National Space Administration - CNSA) தெரிவித்துள்ளது.

பிரித்தெடுக்கப்பட்ட மாதிரிகள் பகுப்பாய்வுக்காக தனியாக உருவாக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. சேகரிக்கப்பட்ட மாதிரிகளை மேலும் ஆய்வு நடத்த சீன ஆராய்ச்சியாளர்கள் தயாராகி வருகின்றனர். மாதிரிகளை ஆய்வு செய்ய மற்ற நாடுகளையும் சீனா அழைத்துள்ளது. ஆனால், அமெரிக்கா போன்ற சில நாடுகளுடன் ஒத்துழைப்பதில் கட்டுப்பாடுகள் இருக்கும் என்றும் சீனா கூறியது.

**முதல் நாடாக சீனா**

இந்த பணியின் மூலம், சந்திரனின் தொலை தூரத்தில் இருந்து பூமிக்கு மாதிரியை கொண்டு வந்த முதல் நாடாக சீனா உருவெடுத்துள்ளது. இந்த பகுதியில் சீனா மட்டுமே ஆய்வு செய்து வருகிறது. சீனாவின் தற்போதைய மிக சக்தி வாய்ந்த ரொக்கெட்டான லோங் (Long) மார்ச் 5 இல் உள்ள வென்சாங் (Wenchang) விண்வெளி ஏவுமையத்தில் இருந்து மே 3 அன்று சாங்'இ 6 (Chang'e 6) ஏவப்பட்டது, இது சந்திரனின் தொலைதூர தென்துருவத்தில் தரை இறக்கப்பட்டது, அங்கு ஆய்வுகளை மேற்கொண்டதுடன், பூமிக்குத் திரும்புவதற்கு முன்பு சந்திரனில் பொருட்களின் மாதிரிகளைச் சேகரித்தது. 2030 இல் நிலவின் மறுபக்கத்தில் மனிதனை தரையிறக்க சீனா முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

# பங்களாதேஷ் ஆட்சிக்கலைப்பின் பின்னணியில் வெளிச்சக்திகள்

வங்கதேசத்தில் இடஒதுக்கீட்டு நடைமுறையை எதிர்த்து கடந்த ஜூன், ஜூலையில் மாணவர் சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தின. இதில் 560 பேர் வரையில் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர். பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பிரதமர் ஷேக் ஹசீனா (Sheikh Hasina) ஒகஸ்ட் 5 ஆம் திகதி பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்து உள்ளார். ஒகஸ்ட் 5 ஆம் திகதி, நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் வங்கதேசத்தின் இடைக்கால தலைவராக பொறுப்பேற்று உள்ளார்.

வங்கதேசத்தில் எதிர்ப்பு இயக்கங்களில் செயல்பட்ட மாணவர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த சில குழுக்களின் வழிகாட்டுதலில் செயல்படும் அமைப்புகள் மூலம் தீவீரப் பயிற்சியும் சீர்குலைவு பணிகளுக்கான செயல்முறையையும் பெற்றனர் என்ற குற்றச்சாட்டை வங்கதேசத்தைச் சேர்ந்த அறிவுஜீவிகளில் ஒரு பிரிவினர் முன்வைத்துள்ளனர். வங்கதேசத்தில் ஆட்சி மாற்றத்தை எப்படி ஏற்படுத்துவது என்பதற்கும் அவர்கள் அமெரிக்கக் குழுக்களிடம் பயிற்சி பெற்றதாக புதிய – அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டுள்ளனர்.

"கடந்த சிலவாரங்களில் நடந்தவை அனைத்தும், ஆட்சி மாற்றத்துக்காக நீண்ட நாட்களாகத் திட்டம் தீட்டி வந்த அமெரிக்காவின் உதவியுடன் செயல்முறைப்படுத்தப்பட்ட நிகழ்வுகளே ஆகும். நாங்கள் அதனை 'வங்காள வசந்தம்' (Bangla Spring) எனக் கூறுகின்றோம். இதன் மூலம் மாணவர்கள் தீவிர சீர்குலைவு இலக்குகளைக் கொண்ட குழுக்களுடன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். வாசகர் வட்டங்கள் மூலம் ஆட்சிமாற்றம் பற்றிய பயிற்சி அவர்கள் பெற்றனர்" எனக் கூறுகிறார் பேராசிரியர் நசுமுல் ஆஷான் கலிமுல்லா (Professor Nazmul Ahsan Kalimullah).

இப்படி ஒரு சூழல் உருவாகிறது என்பதை இந்தியாவால் கணிக்க முடியவில்லை. எனவே இந்தியாவும் இதனை எதிர்பார்க்க இயலவில்லை.

இந்த குழு நடவடிக்கைகளின் பின்னால் ஜமாயத்–இ–இஸ்லாமி (Jamat-e-Islami) மற்றும் பங்களாதேஷ் தேசிய கட்சியின் (Bangladesh Nationalist Party) ஊழியர்கள்



இருந்தனர். அமெரிக்கா, வங்க தேசத்தில் ஆட்சி மாற்றத்துக்காக பல செயல்களை அரங்கேற்றியது. மனித உரிமை மீறல் பிரச்சனைகள் பற்றி தொடர்ந்து அமெரிக்கா பேசியது. வங்கதேச வாசிகளுக்கு விசா கொடுப்பதை அமெரிக்கா குறைத்தது. கடந்த இரு வருடங்களில் ஏராளமான உயர்மட்ட அமெரிக்க அதிகாரிகள் வங்கதேசத்திற்கு பயணம் மேற்கொண்டனர்.

"இஸ்லாமி சாத்ரா ஷிபீர் (Islami Chhatra Shibir) மற்றும் ஜமாயத்–இ–இஸ்லாமி ஆகிய அமைப்புகளை ஷேக் ஹசீனா அரசு தடை செய்தது. ஏனெனில் அவை என்ன சீர்குலைவு சதி வேலைகளை செய்கின்றன என்பதை ஷேக் ஹசீனா அரசு உணர்ந்திருந்தது. எனினும் இந்தத் தடைகள் எதிர்ப்பு இயக்கத்தை வலுப்படுத்த செய்தன என்பதை மறுக்க முடியாது. பல எதிர்க்கட்சிகளின் மாணவர் அமைப்புகள், எதிர்ப்பு இயக்கத்துக்கு ஆதரவு அளித்தன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் பிரதமரின் இல்லத்தை முற்றுகையிட்ட பொழுது, இராணுவத்தின் பூரண ஆதரவு இல்லாததால் ஷேக் ஹசீனா அங்கிருந்து இந்தியாவிற்கு தப்பிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது" என்றும் கூறுகிறார் பேராசிரியர் கலிமுல்லா.

மாணவர்களின் போராட்டங்களுக்கு இராணுவம் கிரியா ஊக்கியாக செயல்பட்டது. உலகின் பல பகுதிகளில் அமெரிக்காவுக்கு எதிரான ஆட்சிகளை சீர்குலைத்து மாற்றுவதில் நிபுணத்துவம் பெற்ற டொனால்டு லூ (Donald Lu) எனும் தூதரக அதிகாரி அடிக்கடி வங்கதேசத்திற்கு வந்தார். ஆளும் கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சியினர் என இரு தரப்பினரையும் சந்தித்தார். தனது கடந்த பயணத்தின் பொழுது மாணவர் மற்றும் இளைஞர் அமைப்புத் தலைவர்களையும் அவர் சந்தித்து இந்த சீர்குலைவு கலகத்திற்கு அவர் வித்திட்டார் என இன்னொரு பேராசிரியர் கூறியுள்ளார்.

"இப்படி ஒரு அரசியல் புயல் உருவாகி வருகின்றது என்பதை இந்தியாவால் கணிக்க இயலவில்லை. ஏனெனில் இந்திய நிர்வாகம் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் மதிப்பீடை மட்டுமே சார்ந்திருந்தது. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ (ISI) அமைப்பும் இந்தியாவுக்கு எதிராக பின்னணியில் செயல்பட்டு கொண்டிருந்தது. ஹிசபுர்–தாஹி ரிர் (Hizb-ut-Tahrir) எனும் அடிப்படைவாத அமைப்பின் செல்வாக்கு இராணுவத்தினரிடையே ஆழமாக இருந்தது. இராணுவ முதன்மை அதிகாரி, ஆட்சி மாற்றம் குறித்து பேட்டி கொடுத்தபோது, இந்த அமைப்பின் பெயரையே முதலில் கூறினார்" என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் கலிமுல்லா.

"வங்காள விரிகுடா கடல் பகுதியில் அமைந்துள்ள வங்கதேசத்தின் செயின்ட் மார்ட்டின் (Saint Martin) தீவை அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு விட்டுக் கொடுத்திருந்தால் எனது ஆட்சியை தக்க வைத்துக்கொண்டிருக்க முடியும்" எனவும் "புதிய இடைக்கால அரசாங்கத்தை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ளும்" என்றும் இந்தியாவிலிருந்து விடுத்த செய்தியொன்றில் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

"அவர்கள் மாணவர்களின் பிணங்களை வைத்து அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பினர். நான் பதவியை ராஜினாமா செய்யாமல் அங்கு இருந்திருந்தால் இன்னும் அதிகமான மாணவர்களின் உயிர் போயிருக்கும். அதில் எனக்கு விருப்பம் இல்லை. அதனால் தான் நான் எனது பதவியை ராஜினாமா செய்தேன்" என ஷேக் ஹசீனா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"ஆரம்பத்தில் மாணவர்களின் போராட்டம் அமைதியாக நடந்தது. முதல்கட்ட போராட்டத்திற்கு பிறகு இடஒதுக்கீட்டை அரசு குறைத்தது. வன்முறையைத் தடுக்க தேவையான எல்லாவற்றையும் அரசாங்கம் செய்தது. இந்த வன்முறை சில அடையாளம் தெரியாதக் குழுக்களால் பரப்பப்பட்டது. இது வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ளது. மேற்கத்திய

நாடுகளால் இந்த வன்முறை தூண்டப்பட்டிருக்கலாம் என்று நான் நம்புகிறேன்.'' என ஷேக் ஹசீனாவின் மகன் சஜீப் வாஜித் ஜோய் (Sajeeb Wazed Joy) கூறியுள்ளார்.

கிட்டத்தட்ட வங்கதேச இடைக்கால அரசின் உறுப்பினர்கள் அனைவருமே அமெரிக்காவுடன் நேரடி தொடர்பில் உள்ளனர். இந்த அரசில் இணைய அழைப்பு விடுக்கப்பட்ட ஒரே இந்து, கலாநிதி பிதான் ரஞ்சன் ரோய் (Dr Bidhan Ranjan Roy)! ஆனால் இவர் பதவியேற்பின் பொழுது கலந்துகொள்ளவில்லை. அவர் அமைச்சரவையில் பங்கேற்பாரா என்பதும் உறுதியற்ற நிலையிலுள்ளது.

இடைக்கால அரசாங்கத்தை வழிநடத்தும் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் (Muhammad Yunus), அமெரிக்காவுடன் வலுவான உறவுகளைக் கொண்டுள்ளார் என 'விக்கிலீக்ஸ்' புலனாய்வுச் செய்திகளை வெளியிட்டுள்ளது. அவர் தொடர்ந்து பலமுறை வங்கதேச அரசியல் சூழல் குறித்து அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் விவாதித்துள்ளார் எனவும் விபரங்கள் வெளியாகியுள்ளன.

சிறுபான்மை மக்களின் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. சுமார் 17,000 இந்து குடும்பங்கள் வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்துக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். சில சிறைகளில் கலகம் நடந்துள்ளது. சிட்டகாங்க் (Chittagong) சிறையில் நடந்த கலவரத்தில் 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஷேக் ஹசீனா இந்தியாவில் தங்கியுள்ளார். தற்சமயம் அவருக்கு பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும், அவரது அரசியல் இலக்கு இன்னும் உயிரோடு உள்ளது.

பாரம்பரியமாக வங்கதேசம் மதச்சார்பின்மை அரசியலமைப்பை கொண்டுள்ளது. இந்தக் கோட்பாடுகள் ஷேக் ஹசீனா அரசினால் கடைபிடிக்கப்பட்டன. பன்முகத் தன்மையை வங்கதேசம் ஊக்குவித்துள்ளது. ஆனால் இடைக்கால அரசின் பதவியேற்பு விழா இதனைப் பிரதிபலிப்பதாக இல்லை.

ஆனால், ''பதவியேற்பை வைத்து, பன்முகத்தன்மை இனி இருக்காது என்ற அச்சம் தேவையில்லை.. இது ஒரு கோட்பாடாக மாறாது. பன்முகத்தன்மை தொடரும் என்றே நம்புகிறோம்'' என ஒரு கல்வியாளர் கூறுகிறார்.

இடைக்கால அரசில் மாணவர் பிரதிநிதிகள் இணைக்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. இடைக்கால அரசு சரியான திசை வழியில் செல்வதை மாணவ பிரதிநிதிகள் உத்தரவாதம் செய்வார்கள் என நம்புவதாகவும், மாணவர்கள் மற்றும் மக்களின் கோரிக்கைகளுக்கான எல்லைக்குள் புதிய அரசு இருப்பதை மாணவர்கள் உறுதி செய்வார்கள் என நம்புவதாகவும் அவர் கூறுகிறார். 1971 இற்கு பின்னால் அமைந்த அரசிலும் ஏராளமான இளைஞர்கள் இருந்தனர் என்பதையும் அவர் குறிப்பிடுகிறார்.

டாக்கா பல்கலைக்கழகத்தின் சமீனா லுத்ஃபா (Samina Luthfa) எனும் இணை பேராசிரியரும் ''புதிய இடைக்கால அரசை நான் வரவேற்கிறேன். ஆனால் அதில் உள்ள பலரும் அரசு நிர்வாக அனுபவம் இல்லாத துறைகளிலிருந்து வந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு பொருத்தமான தேவையான திறமைகள் தேவைப்படுகின்றன. தேசத்தை சீர்திருத்தம் செய்ய ஏராளமான பணிகள் செய்ய வேண்டியுள்ளது. அதற்கான திறமைகள் இவர்களிடம் உள்ளதா என்பது கேள்விக்குறியே'' என்று தெரிவித்துள்ளார்.

# கியூபா மீதான தடைகளை அமெரிக்கா விரைவாக நீக்க வேண்டும் - ஐ.நா. நிபுணர்கள் வலியுறுத்தல்

கியூபாவை பயங்கரவாதத்தை ஆதரித்து ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து அமெரிக்கா நீக்க வேண்டும் என்று ஐ.நா. அவையின் சுயாதீன நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அதேபோல பொருளாதாரத் தடைகள் நிதி முற்றுகையையும் திரும்பப்பெற வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

கியூபப் புரட்சியை முறியடித்து அந்நாட்டை அமெரிக்காவின் காலனியாக மாற்றுவதற்காக அமெரிக்க அரசு பல ஆண்டுகளாக முயற்சி செய்து வருகின்றது. இதற்காக பல்வேறு வகையிலான பொருளாதாரத் தடைகள், முடக்கங்களை கியூபா மீது திணித்துள்ளது.

பொருளாதாரத் தடைகள் மூலம் கியூபாவை கடுமையான நிதி நெருக்கடிக்குத் தள்ளி அந்நாட்டின் வளர்ச்சிக்கான அறிவியல் தொழில் நுட்பம், உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு ஆகியவற்றில் முழுமையான மற்றும் சீரான முன்னேற்றத்தை அடைந்து விடாமல் அமெரிக்கா முட்டுக்கட்டை போட்டு வருகிறது. கியூபா பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடு என ஒரு தலைப்பட்சமாக சித்தரிப்பது சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணான செயல் என்று சுயாதீன நிபுணர்களின் ஐ.நா. குழு தெரிவித்துள்ளது.

அதிக மருத்துவர்களுடன் சுகாதாரத் துறையில் சிறந்த வளர்ச்சி பெற்றுள்ள கியூபாவில் அமெரிக்காவின் தடைகளால் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை உருவாகி வருகிறது. ஐ.நா. பாதுகாப்பு அவையில் கியூபாவிற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் அனைத்தையும் அமெரிக்கா தனது இரத்து (வீட்டோ) அதிகாரத்தின் மூலம் நீக்கியுள்ளது. இந்நிலையில் ஐ.நா. அவையின் சுயாதீன நிபுணர்கள், அமெரிக்க அரசு அனைத்து சர்வதேச மனித உரிமைகள் கடமைகளை கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்றும் கியூபா மீதான தடைகளையும் பொருளாதார முற்றுகைகளையும் முடிவுக்கு கொண்டுவர விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

பன்னாட்டு தளத்தில் வளரும் நாடுகளின் குரலாக கியூபா தொடர்ந்து ஒலித்து வந்துள்ளது. 1960 இல் விவசாய நாடாக இருந்த கியூபா பல தடைகளையும் தகர்த்து, கல்வியிலும் ஆரோக்கியத்திலும் நவீன அறிவியல் தொழில்நுட்ப துறைகளிலும் இன்று தடம் பதித்துள்ளது. கியூபாவின் மொத்தத் தேச உற்பத்தி மதிப்பில் சேவைத்துறையின் பங்கு கூடியுள்ளது, தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இதில் மருத்துவம், கல்வி, போன்ற சேவைத்துறைகளிலும் நவீன உயிரியல் தொழில்நுட்ப துறையிலும் உலகின் பல நாடுகளுக்கு உதவும் நாடாக கியூபா அறியப்பட்டுள்ளது.

சர்வதேச அரங்கில் தன்னலமற்று உதவும் மக்கள் கியூப மக்கள் என்ற நற்பெயரையும் கியூபா பெற்றுள்ளது.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# கோர்ப்பரேட்டுகளின் வேட்டைக்காடாகும் விவசாயம்!

நிலவளத்தை நிர்மூலமாக்கிக் கொண்டுள்ளது பசுமை புரட்சியின் உடன்பிறப்பான இரசாயன உரப்பயன்பாடு. இயற்கை விவசாயத்தை மீட்க அரசுகள் முனைந்தாலும், அதை அனுமதிக்க மறுக்கும் கோர்ப்பரேட்கள்! கோர்ப்பரேட் நலன்களுக்காக பயணிக்கும் ஆலகால அழிவை நோக்கிய விவசாயத்தை விலக்கி வைப்பது எப்படி?

மானுட வாழ்க்கைக்கு உணவு உற்பத்தி தொழிலான விவசாயமே அடைப்படையாகும். அப்படிப்பட்ட உயிர்களின் பசிப் பிணி தீர்க்கும் விவசாயத்தை உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செய்கின்ற சூழல் அரிதாகி வருகிறது.

விவசாயி விரும்பாவிட்டாலும் அவரிடம் வீரிய விதைகள் திணிக்கப்படுகின்றன. உயிர்ச் சூழலுக்கு எதிரான இரசாயன உரங்கள் நிர்பந்திக்கபடுகின்றன. இதன் காரணமாக ஏற்பட்ட புதிய, புதிய பூச்சிகளின் படையெடுப்பை கட்டுப்படுத்த அதி ஆபத்தான பூச்சிக் கொல்லி மருந்துகள் சிபாரிசு செய்யப்படுகின்றன.

இந்த இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் ஒரு பகுதி நாம் உண்ணும் பயிர்களுக்குள் சென்று உணவை நஞ்சாக்குகின்றன. மற்றொரு பகுதி மண்ணுக்குள்ளும், நீர் நிலைகளுக்குள்ளும், காற்றிலும் கலந்து இயற்கைச் சூழலை பாதிக்கின்றன.

தொடர்ந்து பயன்படுத்தப்படும் இந்த இரசாயான உரங்களால் நிலம் மலடானது. நிலத்தில் உள்ள கரிமச் சத்துக்களை இரசாயன உரங்கள் காணாமலடிக்கின்றன. காரணம், இந்த இரசாயன உரங்களால் மண்ணுக்குள் இருக்கும் நுண்ணுயிர்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. நுண்ணுயிர்களின் படிப்படியான அழிவால் சத்தான உணவு நமக்கு சாத்தியமில்லாமல் போனது. இயற்கையான நல்ல மண்ணில் 3% கரிமச் சத்துக்கள் இருக்கும். ஆனால், இரசாயன உரப் பயன்பாட்டால் தற்போது அது சரிபாதிக்கும் கீழே சென்றுவிட்டது. இதனால் விளையும் அரிசியில் சத்தில்லை என்பதைக் காரணமாக்கி அரிசியை செயற்கையாக செறிவூட்டி, செறிவூட்டப்பட்ட அரிசியை உண்ணச் சொல்லி நிர்பந்திக்கிறார்கள். செறிவூட்டப்பட்ட செயற்கை அரிசியால் அதை உண்ட மக்களுக்கு சமிபாட்டுப் பிரச்சினையே உருவாகிறது. அதனால், அரிசியில் சத்து குறைவாக போனதற்கு செறிவூட்டப்பட்ட அரிசி தீர்வல்ல, மண் வளத்தை மீட்பதே தீர்வு.



இரசாயன உரப் பயன்பாட்டை தொடர்வதன் மூலம் மண் வளம் குன்றிக் கொண்டே தான் போகும். மண் வளத்தை மீட்டு, உணவுப் பயிர்களை சத்துள்ளவையாக்க மாடுகள், கொழிஞ்சி செடிகள், இலை, தளைகள் போதுமானவை. மூன்று மூட்டை இரசாயன உரம் தரும் சத்தை கொழிஞ்சி செடியின் பசுந்தாள் உரத்தில் பெறலாம். ஒரு நாட்டு மாடு இருந்தால் போதும் 30 ஏக்கர் நிலத்தை மீட்டுக் கொடுத்து விடும்.

**சாவித்திரி கண்ணன்**

விவசாயம் என்பது இயற்கையோடு இணைந்தும், இயற்கையின் கருணையிலும் நடைபெற வேண்டியதே அன்றி, கோர்ப்பரேட் நிறுவனத் தயாரிப்புகளை சார்ந்தல்ல. மண் வளத்தை மீட்பதற்கான தீர்வு இயற்கையின் கைகளில் மட்டுமே உள்ளது. ஆக, இழந்த மண் வளத்தை மீட்காவிட்டால் நமக்கு சத்தான உணவு என்பது சாத்தியமல்ல, இதற்கு இயற்கை விவசாயமே தீர்வாகும்.

இயற்கை விவசாயமெல்லாம் இன்றைக்கு சாத்தியமே இல்லை, அவைக்கு உதவாத பேச்சு எனச் சிலர் சும்மா அடித்து விடுகிறார்கள். அவர்களுக்கு ஒரு வார்த்தை: இந்தியாவில் இரசாயன உரப் பயன்பாட்டிற்கு பிறகான தற்போதைய சூழலில் விவசாய நிலப்பரப்பு சுருங்கிப் போய்விட்டது. இந்த இரசாயன உரங்களின் விளைவால் நிலம் படிப்படியாக சத்திழிழந்து இந்தியாவின் மொத்த பயிர் செய்யும் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நிலம் மலடாகிவிட்டது. இந்தியாவின் நிலப்பரப்பில் தமிழ் நாட்டின் நிலப்பரப்பு வெறும் 4% தான்! தமிழ் நாட்டை விட அதிகமான இந்திய நிலப்பரப்பு முற்றிலும் விவசாயம் செய்யும் தகுதியை இழந்துள்ளது. பல தலைமுறைகளாக பல ஆயிரம் ஆண்டுகள் நம் மூதாதையர்களுக்கு சோறிட்ட நிலத்தை ஐம்பதே ஆண்டுகளில் நாம் அடுத்த தலைமுறைக்கு இல்லாமல் செய்துள்ளோம். இன்னும் இதே போல் நாம் விவசாயத்தைக் கொண்டு செலுத்தினால் இருக்கும் விவசாய நிலப்பரப்பையும் இழந்து விடுவோம்.

எத்தனை சாதனைகளை நிகழ்த்தி காட்டினாலும், தரவுகளை காட்டினாலும் அதை ஏற்க மறுத்து மீண்டும், மீண்டும் இயற்கை விவசாயத்தில் விளைச்சல் குறைவு என வாதிடுகிறார்கள். இன்றைக்கும் இயற்கை விவசாயத்தில் ஓர் ஏக்கருக்கு 2,000 கிலோ அரிசி கிடைக்கிறது. இதற்கு பயிரிடும் பல விவசாயிகளே சாட்சி. ஆனால், இரசாயன உரங்களால் ஆரம்பத்தில் 2,000 கிலோவில் இருந்து 2,500 கிலோ எடுக்க முடிந்த விவசாயிகளால், இன்றைக்கு 1,600 கிலோ தான் எடுக்க முடிகிறது.

இயற்கை விவசாயத்தை மீட்காவிட்டால் தீர்வில்லை என்பது உலகில் பல அரசாங்கங்களிற்கும் புரிகிறது. ஆனால், இயற்கை விவசாயத்தை மீட்பதில் ஏனோ உறுதித் தன்மை இந்த அரசுகளுக்கு வருவதில்லை. அந்த அளவுக்கு கோர்ப்பரேட் நிறுவனங்களின் வலுவான பிரச்சாரம் விவசாய அமைச்சகத்தை தன் பிடிக்குள் வைத்துள்ளது.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

ரஸ்யா என்ற மிகப்பெரிய நிலப்பகுதி பலம் வாய்ந்த ஒரு நாடாக அமெரிக்காவுக்கு சவாலாக எழுந்து நின்றது. மறுபக்கத்தில் சீனாவின் அபரிமிதமான பொருளாதார வளர்ச்சியும் அமெரிக்காவுக்கு சவாலாக அமைந்தது.

இந்த இரு நாடுகளின் வளர்ச்சியும், நூற்றுக்கும் அதிகமாக உருவாகியிருந்த புதிய சுதந்திர நாடுகளின் தேசிய சுதந்திர மற்றும் பொருளதாரப் போராட்டங்களும் அமெரிக்காவின் உலக ஆதிக்க நிலையிலும், பொருளாதார ஆதிக்க நிலையிலும் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக ஏகாதிபத்தியம் என்பது, மற்றைய நாடுகளின் இயற்கை வளங்களையும், மனித வளத்தையும் சுரண்டியே உயிர் வாழ்கிறது என்ற லெனினிச கோட்பாடுகளுக்கு ஏற்ப, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க நிலையிலும் உலக மக்களின் போராட்டங்கள் தாக்கங்களை ஏற்படுத்தியது. இத்தகைய நிலைமை நீடிப்பதையோ, வளர்ந்து செல்வதையோ அனுமதித்தால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் தொடர்ந்து உயிர்வாழ முடியாது. எனவே, தனக்கு சவாலாக எழுந்த நிலைமைகளைக் கட்டுப்படுத்த அல்லது அவற்றின் மீது தாக்குதல் நடத்த வேண்டிய நிலைக்கு அமெரிக்கா சென்றது.

அமெரிக்கா அந்தத் தாக்குதல்களை இரண்டு வழிகளில் செய்ய ஆரம்பித்துள்ளது.

ஒன்று, தனக்கு பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் சவாலாக உள்ள இரு பெரும் நாடுகளான ரஸ்யாவுக்கும் சீனாவுக்கும் எதிராக செயற்படுவது.

இரண்டாவது, எண்ணெய் மற்றும் கனிம வளங்கள் கொண்ட நாடுகளைத் தனது ஆதிக்கத்தில் வைத்திருப்பது.

இந்த அடிப்படையிலேயே அமெரிக்கா ரஸ்யாவைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் உக்ரைனில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு ஆட்சியில் இருந்த ஆட்சியை நவ நாஜிகளின் கிளர்ச்சி மூலம் அகற்றியது. பின்னர் உக்ரைனை ரஸ்யாவுக்கு எதிரான கருவியாக மாற்றி, ரஸ்யாவுடன் ஒரு மறைமுக யுத்தத்தை ஆரம்பித்தது. அமெரிக்கா ஆரம்பித்த இந்த நிழல் யுத்தம் மூன்றாம் உலகப் போர் ஒன்று உருவாகும் வரை தொடர வாய்ப்புள்ளது.

மறுபக்கத்தில், மத்திய கிழக்கில் நிலவும் அமெரிக்காவுக்கு எதிரான அரபு தேசியவாதத்தை முறியடித்து அங்குள்ள அபரிமிதமான எண்ணெய் வளத்தை கைப்பற்றும் நோக்கத்துடன் அமெரிக்கா முதலில் ஈராக்கின் மீதும், லிபியா மீதும் தாக்குதல் நடத்தி அந்த நாடுகளில் இருந்த ஏகாதிபத்திய விரோத அரசுகளை வீழ்த்தியது. இதுவரை வெற்றி பெறாத போதும், சிரியாவில் ஆஸாத்தின் ஏகாதிபத்திய விரோத அரசை அகற்றும் நடவடிக்கைகளையும் அமெரிக்கா முடுக்கி விட்டுள்ளது. தனக்கு எதிராக பலமான நாடாகத் திகழும் ஈரான் மீதும் பல விதமான தடைகளை விதித்து பலவீனப்படுத்த முயல்கிறது.

இவை போதாதென்று, தனது செல்லப் பிள்ளையான சியோனிஸ இஸ்ரேலுக்கு சகல விதமான இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி, ஹமாஸ் இயக்கத்துக்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் மத்திய கிழக்கில் ஒரு போர் சூழலை அமெரிக்கா உருவாக்கி வைத்திருக்கிறது.

இவ்வாறு உக்ரைன் மூலம் ரஸ்யாவுக்கு எதிராகவும், இஸ்ரேல் மூலம் ஈரான் மற்றும் தனக்கு எதிரான அரபு நாடுகளுக்கு எதிராகவும் இராணுவ அரங்குகளைத் திறந்து வைத்திருக்கும் அமெரிக்கா, இப்பொழுது தனக்கு எதிரான இன்னொரு நாடான சீனாவுக்கு எதிரான தாக்குலைத் தொடங்குவதற்கான தயாரிப்புகளில் வேகமாக ஈடுபட்டு வருகிறது. அதற்கான தயாரிப்புகளை இரண்டு விதமான வழிகளில் அமெரிக்கா செய்து வருகிறது.

ஒருபுறத்தில், உள்நாட்டு நிலைமைகளைப் பயன்படுத்தி குழப்பங்களைத் தூண்டிவிடும் நோக்கில் சீனாவின் தாய்வான், ஹொங்கொங், திபெத், சிங்கியாங் பகுதிகளில் உள்ள எதிர்ப்புரட்சிகர, பிரிவினைவாத சக்திகளுக்கு அமெரிக்கா தூண்டுதல் அளித்து வருகிறது.

மறுபுறத்தில், சீனாவுக்கெதிராக யப்பான், தென் கொரியா, அவுஸ்திரேலியா, இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுடன் இணைந்து இராணுவக் கூட்டணிகளை உருவாக்கி வருவதுடன், சீனாவைச் சுற்றி வளைப்பதற்காக பல படைத்தளங்களையும் உருவாக்கி வருகிறது.

சீனாவை சுற்றி வளைத்து தாக்கி அழிப்பதற்காக ஆசியாவில் போர் வியூகங்களை உருவாக்கி வரும் அமெரிக்கா, இப்பொழுது அதற்கு ஏதுவான முறையில் தென் ஆசியாவிலும் அரசியல் மாற்றங்களை தனக்குச் சாதகமான முறையில் களச் சூழலை மாற்றம் செய்ய ஆரம்பித்துள்ளது.

அதன் ஒரு கட்ட முயற்சிதான் சமீபத்தில் மாணவர் கிளர்ச்சி மூலம் பங்களாதேசில் இருந்த ஸேக் ஹசீனாவின் அரசைக் கவிழ்த்த நிகழ்ச்சியாகும். இந்த ஆட்சிக் கவிழ்ப்பு சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த பதவியிழந்த பங்களாதேஸ் பிரதமர் ஹசீனா, அமெரிக்காவே தனது ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் இருந்ததாக பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருக்கிறார். பங்களாதேசில் அமெரிக்க படைத்தளம் ஒன்றை அமைக்க அமெரிக்காவுக்கு தான் அனுமதி கொடுக்க மறுத்த காரணத்தாலேயே அமெரிக்கா தனது அரசைக் கவிழ்த்ததாகவும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இதேபோல, 2022 இல் பாகிஸ்தானில் மக்கள் ஆதரவுடன் தெரிவாகியிருந்த இம்ரான் கானின் அரசை நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற சதியின் மூலம் கவிழ்த்த அமெரிக்கா, தனது விசுவாசி ஒருவரை ஆட்சிக்குக் கொண்டு வந்தது. அந்தச் சந்தர்ப்பத்திலும், தனது ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் அமெரிக்காவே இருந்தது என, இம்ரான்கான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இதே நிலைமைதான் 2022இல் இலங்கையிலும் நிகழ்ந்தது. 69 இலட்சம் மக்களின் வாக்குப் பலத்துடன் தெரிவாகியிருந்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சியை, ‘அரகலய’ என்ற கிளர்ச்சியின் மூலம் கவிழ்த்த அமெரிக்கா, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனக்கு விசுவாசமான ரணில் விக்கிரமசிங்கவை அதிகாரத்துக்கு கொண்டு வந்தது. இந்த ஆட்சிக் கவிழ்ப்பு சம்பந்தமாகவும் கருத்து வெளியிட்ட கோத்தபாய, தனது ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் இருந்ததாக மறைமுகமாக அமெரிக்காவை சாடியிருந்தார்.

நேபாளத்தில் கூட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உள்ள கூட்டணி அரசில் பிளவுகளை ஏற்படுத்தி அந்த அரசை வீழ்த்தும் முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன.

அதேபோல, மாலத்தீவில் அண்மையில் தெரிவான சீனாவுக்கு நட்புறவான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் அந்நிய சக்திகள் ஈடுபட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மாலத்தீவைப் பொறுத்தவரை அந்நிய சக்திகள் என்பது, இந்தியாவும் அமெரிக்காவும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல.

அமெரிக்கா தென்னாசியாவிலும், பொதுவாக ஆசியாவிலும் மேற்கொண்டு வரும் அரசியல் சதி மற்றும் சீர்கலைவு வேலைகளுக்கு இந்தியாவை ஆட்சி புரியும் மோடியின் வலதுசாரி இந்துத்துவ அரசின் பங்களிப்பும் உண்டென்பது இரகசியமான விடயமல்ல.

ஆனால் இந்தியாவின் இந்த இரண்டக வேலை தனக்குத்தானே தனது தலையில் மண் அள்ளிப் போடும் செயல் என்பதை காலம் வெகு விரைவில் உணர்த்தும். ஏனெனில், ஒரு பலம் வாய்ந்த இந்தியா உருவாவதையும் அமெரிக்கா விரும்பாது என்றபடியால், இந்தியாவுக்கும் அமெரிக்கா இறுதியில் குழிபறிக்கும் என்பது நிச்சயம்.

ஆனால், உலக வரலாற்றை எடுத்துக்கொண்டு பார்த்தால், எந்தவொரு ஏகாதிபத்தியமும் எந்தவொரு ஆதிக்க நடவடிக்கையிலும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. அதற்கு ஒரு உதாரணமாக, ஆசியாவை ஒரு காலத்தில் ஆதிக்கம் செய்த பிரித்தானியாவும் யப்பானும் மக்கள் போராட்டங்களால் தோற்கடிக்கப்பட்ட வரலாறுகள் உள்ளன.

இப்பொழுது அமெரிக்காவின் முறை. அமெரிக்காவின் முகத்திலும் முதுகிலும் தோல்விக்கான வரலாறு ஆசிய மக்களால் விரைவில் எழுதப்படப்போவது நிச்சயம்.

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

இன்னொரு குறைபாடு என்னவெனில், தேர்தல் சம்பந்தமான கணிப்பீட்டு ஆய்வுகளில் விஞ்ஞானபூர்வமான ஆய்வுமுறை இல்லாதிருப்பதாகும். பிரதானமாக வாய் மூலமாக பெறப்படும் இந்தத் தரவுகளில், வேட்பாளர்களுக்குச் சார்பான முகாம்களில் உள்ளவர்கள் தமது வேட்பாளர்தான் வெற்றி பெறுவார் எனக் கூறி வருவதாகும். இது கற்பனையான முறையில் தேர்தல் மீது செல்வாக்கு செலுத்துவதாகும்.

இதற்கு ஒரு நல்ல உதாரணத்தை 2019 ஜனாதிபதித் தேர்தலின் போது காணக்கூடியதாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட அரசியல் வேட்பாளரின் ஆதரவாளர்கள் தென்னிலங்கையில் ஆயிரக்கணக்கான முச்சக்கர வாகன ஓட்டுனர்களை ஒப்பந்தம் செய்து, குறிப்பிட்ட அரசியல் வேட்பாளர் தேர்தலில் நிச்சயமாக வெற்றியீட்டுவார் எனத் தமது வாடிக்கையாளர்களிடம் பிரச்சாரம் செய்ய வைத்தனர்.

எனவே, பிரதான வேட்பாளர்கள் கற்பனையான தேர்தல் புலுடாக்களுடன் வர வேண்டாம். தேர்தலில் முதலாவது சுற்று வாக்குப் பதிவில் வெற்றிக்குத் தேவையான 51 சத வீதம் வாக்குகள் பெறும் சூழல் எந்த வேட்பாளருக்கும் இல்லை. எனவே, வேட்பாளர்கள் கற்பனையான முறைகளைக் கைக்கொண்டு, பிரதானமாக சிறுபான்மை இனங்களின் வாக்குகளைக் கவர்ந்து, தேவையேற்படின் இரண்டாவது சுற்று கணிப்பீட்டுக்குச் செல்ல வேண்டி இருக்கும்.

(கொழும்பிலிருந்து வெளியாகும் 'டெயிலி மிரர்' ஆங்கிலத் தினசரியில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் சாராம்சம்)

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

ஆபிரிக்க நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கும் விடுதலை பெற்ற ஆபிரிக்க நாடுகளின் வளர்ச்சிக்கும் கியூபா குறிப்பிடத்தக்க பங்களித்துள்ளது. அதேபோல் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வளர்ச்சியிலும் கியூபா சிறப்பான பங்களிப்பு செய்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இணைந்து, ஜனநாயக சக்திகளை வலுப்படுத்துவதில், கியூபாவின் பங்கு பரவலாக அங்கீகரிக்கப்படுகிறது.

பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியை பொறுத்த வரையில் கியூபாவின் குறியீடுகள் வளரும் நாடுகளின் வரிசையில் முன்னணியில் உள்ளன. ஏற்றத்தாழ்வுகள் ஒரு எல்லைக்குள் வைக்கப்பட்ட, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை சாதித்துவரும் நாடுகளில் ஒன்றாக கியூபா திகழ்கிறது.

பணக்கார நாடுகளில் ஒன்றாக கியூபா அறியப்படவில்லை. ஆனால், சமத்துவ சமூக பொருளாதார விழுமியங்களை பொதுவாக உயர்த்திப்பிடிக்கும் நாடாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதில் முன்னணி நாடுகளில் ஒன்றாகவும், கியூபா திகழ்கிறது. இதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது, கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை பாத்திரமும், கியூபா மக்களின் நெடிய ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியமும், உலகளவில் சோசலிச மற்றும் இதர ஜனநாயக சக்திகளின் ஆதரவும் என்று கூற முடியும்.

பெரும் தடைகளை தகர்த்து அனைவரையும் உள்ளடக்கிய தன்மையிலான வளர்ச்சியை கியூபா சாதித்திருப்பதற்கு அதன் சோசலிசப் பாதையே மையமான காரணம். கியூபப் புரட்சியின் உள்ளார்ந்த ஜனநாயக பண்புகளும் விழுமியங்களும், மக்கள் மீது அரசியல் தலைமையும், அரசியல் தலைமை மீது கியூபா மக்களும் வைத்திருக்கும் பரஸ்பர நம்பிக்கையும், கியூபாவின் சோசலிச அமைப்பின் வலிமையின் அடிப்படைகள்.

**8ம் பக்கத்தொடர்ச்சி...**

எல்லாத் தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகின்ற உரிமையை ஒப்புக் கொள்வது, குறிப்பிட்ட இனம் பிரிந்து போகின்ற பிரச்சினை எழுகின்றபோது எல்லா ஏற்றத்தாழ்வுகளையும் எல்லா விஷேச உரிமைகளையும் எல்லாத் தனித்துவ போக்குகளையும் நீக்கும் நோக்கத்துடன் அணுகிச் சீர்தூக்கிப் பார்ப்பது, இதுதான் பாட்டாளி வர்க்க நிலைபாடு.

('தேசிய இனச் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையும் முதலாளித்துவத் தேசியவாதமும்' என்ற நூலில் இது வெளியாகியது. ஏ.எம்.கே. எனச் சுருக்கமாக அழைக்கப்படும் காலஞ்சென்ற தோழர் ஏ.எம்.கோதண்டராமன், 'நக்சலைட் இயக்கம்' என அறியப்பட்ட இந்திய மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கிளை அமைப்பாளர்களில் முக்கியமானவரும், அதன் தத்துவ ஆசிரியர்களில் ஒருவருமாவார். மார்க்சிய– லெனினிய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் 'சமரன்' என்ற பத்திரிகையில் ஏராளமான அரசியல் கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். 'செந்தாரகை' எனும் இலக்கிய இதழைக் கொண்டு வந்ததிலும் அவரின் பங்கு இருந்தது. தனது 84 வயதில் 25.11.2018 அன்று ஏ.எம்.கே காலமானார்)

# வெனிசுவேலாவின் தேர்தலை இழிவுபடுத்தும் முயற்சிகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்




தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றும், எண்ணெய் வளம் மிகுந்த நாடுகளில் ஒன்றுமான வெனிசுவேலாவின் அடுத்த ஜனாதிபதியாக, தற்போதைய ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரது பதவிக்காலம் ஜனவரி 10, 2025 முதல் தொடங்கி, ஜனவரி 9, 2030 வரையில் இருக்கும். இந்தத் தேர்தல், 2023 ஒக்ரோபரில் அரசுக்கும், அமெரிக்க ஆதரவு எதிர்க்கட்சிகளுக்கும் பார்படாஸ் தீவில் கையெழுத்தான உடன்பாட்டின் அடிப்படையிலேயே நடந்துள்ளது.

எனினும், வெளியாகியுள்ள தேர்தல் முடிவை ஏற்க மறுத்து எதிர்க்கட்சிகள் வன்முறைப் போராட்டத்தில் இறங்கியுள்ளன. இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் ஆதரவு தெரிவித்தாலும், பிரேசில், மெக்சிகோ போன்ற நாடுகளின் ஜனாதிபதிகள் மதுரோவுக்கு ஆதரவுக்கரம் நீட்டியுள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள 30 அமைப்புகள் கையெழுத்திட்டு மதுரோவை ஆதரித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். அந்த அறிக்கை வருமாறு:

**சதி முயற்சிக்கு எதிராக மக்கள் மதுரோவை ஆதரிக்கின்றனர்!!**

யூலை 28 இல் பல இலட்சக்கணக்கான வெனிசுவேலா (Venezuela) மக்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட 10 வேட்பாளர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கச் சென்றனர். வேட்பாளர்களில் தற்போதைய ஜனாதிபதி நிக்கேலஸ் மதுரோவும் (Nicholas Maduro) அவருக்கு எதிரான பிரதான போட்டியாளரான எட்முண்டோ கொன்ஸாலெஸ்சும் (Edmundo Gonzalez) உள்ளடங்கி இருந்தனர். தேர்தல் பிரச்சாரத்தின் போது, நாட்டின் எதிர்கால பாதை குறித்து நாடு முழுவதும் ஜனநாயக ரீதியில் வெற்றிகரமான விவாதம் நடந்தது. இருந்தபோதும், குறுகிய நோக்கம் கொண்ட மேற்கத்தைய ஊடகங்கள் தேர்தல் மோசடித்தனமாக நடைபெறவுள்ளதாக முன்கூட்டியே பிரச்சாரங்களை ஆரம்பித்துவிட்டன.

எதிர்க்கட்சி வேட்பாளருக்கு மக்களின் அமோக ஆதரவு இருப்பதாகவும், அரசாங்க ஆதரவாளர்கள் மோசடி மூலம் மட்டுமே வெற்றியைத் தக்க வைக்கும் சாத்தியமுண்டு என இந்த மேற்கத்தைய ஊடகங்கள் பிரச்சாரம் செய்தன. வொசிங்டனின் (Washington) விருப்பத்துக்கு அமைவாக தேர்தல் முடிவு அமையாவிடின் மதுரோவை பலாத்காரத்தின் மூலமாவது அதிகாரத்திலிருந்து அகற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது.

குற்றம் காண்கின்ற, சுயநலம் மிக்க இந்தத் தர்க்கத்தை நாம் நிராகரிக்கிறோம். வெனிசுவேலாவின் முன்னாள் ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் (Hugo Chavez) அவர்களால் பொலிவேரியன் புரட்சி (Bolivarian Revolution) ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வெனிசுவேலாவில் 30 இற்கும் மேற்பட்ட தேர்தல்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட்டுள்ளன. வெனிசுவேலாவின் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் நடைமுறைகளைப் பரிசீலிப்பது உட்பட மோசடிக்கெதிரான பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் உண்டு.

கடந்த காலத்தில் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நீதியானதும் ஜனநாயக ரீதியானதும் என வெளிநாட்டு நிறுவனங்கள் அங்கீகரித்துள்ளன. 2018 இல் நடைபெற்ற தேர்தலில் மதுரோ வெற்றி பெற்ற பின்னர், ட்ரம்ப் நிர்வாகம் தேர்தல் முடிவை ஊதாசீனப்படுத்தி, வெனிசுவேலாவின் சட்டப்படி தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை தூக்கியெறியும் முயற்சியிலும் இறங்கியது.

இந்த நடவடிக்கைகளால் வெனிசுவேலா மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். அமெரிக்கா விதித்த பொருளாதார மற்றும் தடைகளால் முழு மக்களும் பாதிக்கப்பட்டதுடன், அரசமைப்புக்கு விரோதமாக அரசாங்கத்தை அகற்றும் சூழலும் உருவாக்கப்பட்டது. அமெரிக்காவின் தடைகளால் சுமார் 40,000 வெனிசுவேலா மக்கள் உயிரிழக்க நேரிட்டதாக 'பொருளாதார கொள்கை மற்றும் ஆய்வு நிறுவனம்' வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வொசிங்டன் ஆட்சி மாற்றத்துக்கான தனது அரசியல் இலக்கில் தோல்வி கண்டுள்ளது. வெனிசுவேலாவில் பொருளாதாரம் இப்பொழுது மீட்சி அடைந்து வரும் காலமாகும். அமெரிக்க அரசாங்கம் தேர்தல் மோசடி என்ற புரளியைக் கிளப்பி தனக்கு விருப்பமான குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. வெனிசுவேலா மக்களின் சுதந்திரத்தையும் சுயாதீன உரிமையையும் மதித்து, அவர்கள் வெளியார் தலையீடின்றி தமது தலைவர்களைத் தெரிவு செய்யும் உரிமையை மதிக்க வேண்டும் என நாங்கள் கோருகின்றோம்.

(இந்த அறிக்கை அமெரிக்காவில் இருந்து வெளியாகும் Workers World என்ற பத்திரிகையில் வெளியானதாகும்)